[illegible]

V2 No. 7 14 Feb 1929

[illegible]
[illegible], N28 [illegible]
N29.2.7
1890[illegible]

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன் தோறும் வெளிவரும்

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தேரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 2.] 1929 ஹூ பிப்ரவரி மீ 14உ [No. 7.

OFFICE OF THE R... 1929 MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 121
2. அப்பர்
E.N. தணிகாசலமுதலியார் B. A., B. L. 123
3. ஏமாங்கதத் திளவரசன் (A Novel)
T. N. சேஷாசலம் B A., B.L. 125
4. தமிழ்ப் பாடம் 127
5. கம்பராமாயணம்
T. N. சேஷாசலம் B. A., B. L. 129
6. சிலப்பதிகாரமும் மணிமேகலையும்
P. இராமாநுஜன் 132
7. ஊசியின் காதில் ஒட்டை நுழைந்தது
T.P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B. L. 133
8. சீர்திருத்தம், Man, The Reformer
(By Emerson.) 135
9. வர்த்தமானம் 139

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாயினும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினாங் தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது.
மானேஜர்.

கலா நிலயம்.

புலமைக் குரிய பொய்.

இவ்வாரத்து இதழில் நமது நண்பர் ஸ்ரீமான் P. இராமாநுஜன் என்பவர் ஒருவர், சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இருபெரும் நூல்களின் பதிகத்தைப்பற்றித் தமக்கு விளைந்துள சில சந்தேகங்களைத் தெரிவித்து எழுதி யிருக்கின்றனர். இதனைப்பற்றி நம் சந்தா நேயர்கள் ஏனையவரில் யாரேனும் தம் கருத்தைத் தெரிவிப் பார்களாயின் அவர்களது உரையையும் ஓர்ந்து பின் எமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கலாம் என்றிருக்கின்றோம். இத்தகைய ஆராய்ச்சி கவியினது இனிமையை நமது உள்ளத்தில் கொண்டு அனுபவிப்பதற்கு இன்றியமையாதெனச் சிலர் நினையார். ஆயினும், நூலினுள் காணும் அகச்சான்றுகளையும், புறச்சான்றுகளையும் நிரைநிரைவைத்துச் சீர்தூக்கி முடிவுகாட்டுவது சுவையுடையவோர் செயலே என்பதற் கையமில்லை. ஆதலின், எமது நண்பர் பலர் இதனை நிபமாய்க்கொண்டு சிலப்பதிகாரத்தின் பதிகத்தில் முரண்கள்போல் காண்பனவற்றை நன்கு ஆராய்ந்து, அவைகளுக்கு அமைதிகூற இயலுமாயின் கூறியும், மற்று அமைதியின்றெனின் முரண்களே ஆமாறும், அடியார்க்கு நல்லார் உரையைக் கொண்டும், பிற ஆதாரங்களாலும் இனிதின் எடுத்துக்காட்ட முன்வருவாரென எதிர்பார்க்கின்றோம். எம் வரையில் பெரும்பான்மை, இப்பதிகம் இளங்கோவடிகளாலேயே தற்சிறப்புப்பாயிரமாய்ப் பாடப் பெற்றிருக்கலா மென்றும், கால இடையீடு அப்பதிகத்திற்குள் கரந்திருந்து நிகழ்ச்சிகளைச் சிறிது மயங்கும்படி. செய்கின்றதென்றும் எண்ணி இருக்கின்றோம். ஆயினும், அதுவே முடிவென்று நாம் தற்காலம் கூறவில்லை. மற்றவர் இதுபற்றிக் கூறுதற்குள நியாயங்களை ஓதியபின் எமது அபிப்பிராயம் மாறினும் மாறலாம்.

மற்று, ஈண்டு நாம் உரைப்பதற்கு வேறொன்றுளது. அது, எம்நண்பர் ஸ்ரீமான் இராமாநுஜன், இயற்கை நவிற்சியைப் பாராட்டினராய், ஆஸ்கார் வைல்ட் என்னும் ஆங்கில அறிஞர்தம் கட்டுரையின் மொழிபெயர்ப்பின் கருத்தை மறுத்துக் கூறியிருப்பதாம். 'ஸிரில்' என்பவனுக்கு அவ்வுரை வியப்பளித்தது போன்றே நமது நண்பர்பலர்க்கும் அது வியப்பளித்திருக்கு மென்பது உண்மையே. ஆயினும், அக்கட்டுரையின் உள்ளக்கிடக்கையை உணர்தற்கு அதனை மிகவும் ஆழ்ந்து ஊன்றி நோக்கல் வேண்டும். ஆங்கிலத்திலேயே அதனை உணர்வது எளிதன்று. பற்பல விஷயங்கள் அதனில் நமதுபுத்திக்கு எட்டுவதுபோல் தோன்றித்தோன்றிப் பற்றப்போகுங்கால் அகன்றுவிட நேரிடுகின்றன. அத்தகைய ஒன்றை, அக்கருத்திற்கு அயலாய வேறொரு பாஷையில் மொழிபெயர்க்

கும்போது, முதல் நூலிலேயே மயக்கமுடைய இடங்கள் தமிழில் பின்னும் மயக்கத்திற் கிடந்தருவனவாகும் என்பதை யாவரும் ஒவ்வுவார். இது மொழிபெயர்ப்பாளர் குறையுமன்று. இவையனைவற்றின் மொழிபெயர்ப்பிற்கே இயன்றதோர் குறையாம். எனினும், இம்மொழிபெயர்ப்பு முயற்சிலோபமின்றிக் கூடியவரையில் முதனூலின் முழுக்கருத்தையும், சிறிது வருந்தியேனும், அறிந்துகொள்வதற்கு இயல்வதாமாறு அமைந்திருக்கின்றதென்றே மதிக்கின்றோம். அவ்வாசிரியரின் உட்கருத்தை உணர்வதற்கு உதவுமென்று சிறியதொரு முன்னுரையும் வரைந்து தந்தோம். முதனூலிற்கே உரித்தாயதும், மொழிபெயர்ப்பால் பின்னுமொருபடி மிகுந்திட நேர்ந்ததுமாகிய ஐயம் திரிபாதிய மயக்கங்கள் தீர்வதற்கு எமது அச்சிறு முன்னுரை போதியதாகவில்லை என இப்பொழுது அறியலாகின்றோம். ஆதலின் அதனை ஓரளவு விளக்கியுரைத்தல் எம் கடன் ஆகின்றது.

சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய சங்கநூல்களிற் காணும் இயற்கைநயத்திற்கு ஆஸ்கார்வைல்ட், 'பொய்மை' என்ற பெயரால் வகுத்தநெறி மாறுபட்டு நிற்கவில்லை. 'மிடுக்கிலாதானை வீமனென்பதுபோல்' பேசுகின்ற பொய் புலவர்க்கே உரிய பொய்யன்று. அது இச்சகம் பாடப்புகுந்தோர் யாவர்க்கும் ஒக்கும். புலமை என்பது பொய்யால் சிறக்கும் என்றவளவில் பொய்யெல்லாம் புலமை எனவே கூறினர் என்று எண்ணிவிடற்குத் தர்க்கமுறை இடந்தராது. இத்தகைப் பொய்களெல்லாம் காரியப் பொய்கள். பொய்யை மெய்போல் உரைக்க முயல்கின்ற இழிதகை முயற்சியின் தோற்றங்கள் அவை.

ஆஸ்கார் வைல்ட் புலமையென்று பாராட்டிய பொய்கள் அவையல்ல. பொய்யே ஆனவைகளை மெய்கள் போல் போலிவேடம்போடாமல் பொய்யேயாகக் கூறுகின்ற திறத்தைத்தான் அவர் புலமை எனக் கூறுகின்றார். அவர் கூறுவதையெல்லாம் நுனித்து உணருங்கால் நமதருந்தமிழ்ப் புலமைக்குத்தான் இலக்கணம் வகுத்தாரோ என்னும்படி யிருக்கின்றது. ஆரியக் காவியங்களும் அவ்வகையனவே.

அன்னப்பறவையென்பது நம்புலவர் மனதிலன்றிப் பறப்பதற்கு இடம் பெற்றிராப் பறவை. எந்நூலிலும் இப்பொய்ப்பறவை புகுந்துநடக்கும் பாசுரங்கள் யாவும் மிக்க அழகு வாய்ந்தனவா யமைபக் காண்கின்றோம். காமநோயுற்றார்க்கு அந்தியுந் தென்றலும் பிள்ளைப்பிறையும் அன்றிலும் முழுமதியும் இரவும் இருளும் சந்தனக்குழம்பும் நறுமணக்கமழ்ச்சியும் யாவுந் துன்புறுத்துந் தன்மையைப் பலபட நுவல்கின்ற பாகங்கள் எந்நூலிலும் அழகின் சிறப்பெல்லாம் அடங்கப்பெற் றிருக்கின்றதென்பது ஒருதலை. சிலப்பதிகாரத்தினுள் மிகச்சிறந்த பாகமாகிய கானல்வரியின்கண் அமைந்த அழகு, "மதியுமிழ்ந்து கதிர் விழுங்கி வந்தவிம் மருண்மாலை" என்பது போன்ற அடிகளால் திகழ்கின்றது. அந்தியும் சந்திரனும் தண்ணந்தா ரைத்துன்புறுத்தும் செய்தி பொய்யேயன்றி வேறன்று இது பொய்யென்று கவிகளும் அறிவர், நாமும் அ[illegible]வோம், அதனை மெய்ப்படுத்துதற்குக் கவிகள் முய[illegible]கின்றாரலர். "ஐய, பொய்யையே யான் பொய்யாக[illegible]வெபாடுகின்றேன், கேட்டு நீ இன்புறவாய்" என்று அவர் பாடுகின்றார். கடுகத்தனை மெய்யை ஆதாரமாய் வைத்துக்கொண்டு, அதை மிகையாகக் கூறுமாற்றால் பொய்யாக்கப் புகுவது பெரும்பான்மை உயர்தரப் புலமையின்பால் சேராதெனச் செப்பலாம். கலைஞருக்கோ மலையென்றசொல்லக் கடுகத்தனையும் ஆதாரம் வேண்டா.

கலையுணர்வின்நிலையை உற்றுநோக்குங்கால் பொய்க்கும் புலமைக்கும் இடைநின்ற எல்லை மிகவும் நுட்பமானது கடுகிருக்க அதனைநம்பி மலையெனப் பாராட்டுவது பொய். இந்தப்பொய்யேபொதுவாய்க்கவிகளின் அழகினைச் சிறப்பிக்கப் போதும். ஆனால், புலமையின் கலையெலாந் திரண்டு திகழ்கின்ற பாசுரங்களோ அக் கடுகளவு மெய்யுங் கலவாது பாடப் பெறுகின்றன. எனின் சிறிதளவு மெய்யிருப்பதைப் பொய்யென்றும் முழுவதும் பொய்யாலேயேஆகுமதைப் புலமையென்றும் ஒருவாறு வகுக்கலாம். எனினும் இது ஏகதேசமே.

இருப்பனகண்டு இருக்குமாறே இயம்புவது காவியப்பயிற்சியின் பாலபாடம்.(Kindergarten lesson). புலமையின் முதிர்ச்சி, இல்லாதனவற்றை இருக்க இயலாதவகையில், "இது இல்லை, ஆயினும் இருக்கின்றதென்று நானிங்கு யாவரும் அறிந்த இப்பொய்யைக் கூறுகின்றேன், சற்றே கேள்," என்று இயம்புவதாம். கேட்டு, "அம்ம! இவ்வாறிருந்தாற்ற ஞகாதோ என்று நம்பால் ஒரு அவாவினை விளைவிக்கின்ற கவிஞனே கலையுணர்வை நம்முள் புகட்டும் தெய்வத் தொழிலைச் சாதித்து வைக்கின்றான். அவனது பொய்யை நாம்கேட்கும்போது,நம்மைமறந்தும் கணமேனும் அதனை மெய்யென நாம் நினைக்கநேருமாயின் அவன் கலையின் குணம் குலைந்துவிட்டது. சிலகவிகள் இவ்விதங் கையாளத்தெரியாமல் பொய்யைப் புனைவதால் சுவை கெடுகின்றது; ஆதலால்அச்செய்கையை இகழ்கின்றோம். சூடிக்கொண்டபூனை நகுதற்கொத்த தாகுமேயன்றிக் கொடு வரிப்பெருமை குன்றியதாகாது. பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால் மெய்போலும் பேச முயல்வது தீயோர் தொழில். அவன் சொல்வன்மை இன்மையினால் மெய்போலும் பேசிவிட்டானாகில் புன்கவி யாகின்றான். பொய்யுடையொருவன் பொய்போலும்மே பொய்போலும்மே பேசுதற்குத்தான் சொல்வன்மை அதிகம்வேண்டும். நம்முடைய வாசகர்கள் பொய்யொன்றைப்பொய்யாக இன்பமும் பயக்குமாறு சொல்லமுயன்று தம்மைச் சோதித்துப் பார்த்துக்கொள்வாராயின் இதனருமை தெரியலாகும்.'பொய்ம்மையும் வாய்மைஇடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்,' என்ற குறள் வேறு கருத்துடையதாயினும் இவ்வுண்மைப்புலமையையும் தழுவியிருக்கின்ற தென்னலாம். பயன் கருதாத இன்பத்திலும் புரைதீர்ந்த நன்மை, எதன்பால் உளது!

ஆஸ்கார் வைல்ட் என்பவர்தம் கலையுணர்வு ததும்பும் கட்டுரையின் கருத்தையே இங்கு விளக்கியிருக்கின்றோம். இதனைக்கொண்டு அவர் கட்டுரையின் மொழிபெயர்ப்பை மீண்டுமோர்முறை நுணிகிஆராய்ந்தால், தோன்றுதற்குரிய ஐயமெல்லாம் தீர்ந்திடும் என்று இயம்பத் துணியோமாயினும், அது உலகமலைவென உறுத்தாதென்றே எண்ணுகின்றோம்.

OFFICE OF THE RE... 1929

அப்பர்.

2. அப்பர் யௌவனமும் பலசமய ஆராய்ச்சியும்.

3. அப்பர் திருமறுமாற்றத் திருத்தாண்டகம் பாடிய நாள்முதல் அவரைச் சமணர் கல்லிற்பூட்டிக் கடலில் எறிந்த வரையில் நடந்த சரித்திர ஆராய்ச்சி.

104 பக்கத் தொடர்ச்சி

அப்பர் முத்தியடைந்த பல வருஷங்களுக்குப் பின்னரே, அவர் சரிதை பெரியபுராணத்தில் கர்ணபரம்பரையாய் வந்த கதையொழுங்கு பற்றிச் சேக்கிழார் கூறினரென்றும், அவர் கேட்டதைக் கேட்டவாறு எழுதியதால் அச்சரித்திரக் கூற்றுக்குத் தான் உத்தரவாதி யல்லரென்று முகவுரையாய்த் திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் முதலிலும் இறுதியிலும் புனைந்த விஷயமும், முன்னமே காணப்பட்டது. அத்தகைய புனைந்துரை திருநாவுக்கரசுநாயனார் புராணத்திற்கே சிறப்பாய், அதற்குமுன் கூறிய சண்டேசுர நாயனார் புராணத்திலும் பின்னால் பகர்ந்த குலச்சிறை நாயனார் புராணத்திலும் காணப்படாமையால், இலக்கிய ஆராய்ச்சியிற் சிறந்த சேக்கிழார்பெருமான், தான் வகுத்த கர்ணபரம்பரைக் கதையானது அப்பர் தேவாரத்தில் காணப்படும் சில விஷயங்களுக்கு முரணாகக்கூடுமென்று எண்ணியே இத்தகைய பாயிரம் மொழிந்தனரென்று நாம் எண்ணக்கூடியவரா யிருக்கின்றோம்.

திருமறுமாற்றத் திருத்தாண்டகம் பாடியதுமுதல் அப்பர் சமணரால் கல்லிற்பூட்டிக் கடலில் எறியப்பட்ட நாள்வரையில் நடந்த சங்கதிகளை நான்கு பாகங்களாய்ப் பிரித்து ஆராய்வோம்:—

(1) அப்பர் சமண மன்னனிடம் கொண்டுபோகப் பட்டமை. (2) சமணர் கொடுமை. (3) சமணர்முன்பு பாடிய பாடல்கள். (4) சமணரிடமிருந்து அப்பர் மீட்சி.

சமணநாட்டைத் துறந்து சைவஸ்தலமாகிய திருவதிகை வீரட்டானத்தில் யாதொரு பொருளின் பற்றின்றித் திருத்தொண்டு செய்பவரைப் பிடித்துவரப் பல்லவராயன் மந்திரிமாரைச் சேனையுடனும் * அளவற்ற பொருளுடனும் அனுப்பினனென்பது நோக்குங்காலை, அப்பரால் தனக்கே துன்பம்விளையுமென்று எண்ணிச் செய்தானோ, அல்லது சமணமதம் கைவிட்டவனைத் துரத்திப்பிடித்துத் தண்டிப்பதுஒழுங்கெனச் செய்தானோ என்பதை யோசித்துச் சீர்தூக்கின் எது உண்மையான காரணமென்று துணியக்கூடவில்லை. சமணமதம் கைவிட்டு ஊரையும்விட்டு ஓடிப்போன ஒருவன்பின், அரசன் சேனையனுப்பிப் பிடித்துவரும்படி சொல்லுவானாயின், அவ்வாறு நடத்துவதற்குக் காரணம், மதசம்பந்த மாத்திரமன்றி அரசாங்க சம்பந்தமும் பெற்றிருக்குமென்றே எண்ணல் வேண்டும். அடக்க முடைமையே ஆபரணமாய்ப் பெற்ற அப்பர், மந்திரிமார் சேனைத்தலைவர்முன் பாடிய திருமறுமாற்றத் திருத்தாண்டகத்தில் தன்னைக் குறித்தவிடத்து "நாம்" என்னும் தன்மைப் பன்மையே முற்றும் உபயோகிப்பதைக் கவனிப்போமானால், அப்பர் பல்லவன் குடியாயினும் அந்தஸ்தில் மந்திரிமார் முதலானோருக்கும் உயர்ந்த நிலை பெற்றிருந்தவராய்த்தான் முன்னம் அவருடன் சம்பாஷிக்குங் காலங்களிலும் தன்மைப் பன்மையால் மறுமொழி பகர்ந்தவரென்றும் உணரலாம். பல்லவன் ஆளும் நாட்டை அவர் ஆளக்கூடிய நிலை அல்லது பந்துத்துவம் பெற்றவராயும் இருந்திருக்கலாம். மதத்தைவிட்டுத்தருமசேனர்வேறு நாட்டிற்குச்சென்றதும் பல்லவனுக்குஅரசாட்சியைப் போக்கடிக்கும் ஏது விளையுமென்றுபயப்பட்டுச் * சமணமுனிவர்கள் தூண்டுகோலுக்கு அவன் உட்பட்டனனென்பது யுக்தி யனுபவத்திற்குப் பொருந்தும். எங்ஙனமாயினும், மதத்தைக் கைவிட்டகாரணம் ஒன்றாலேயே பல்லவன் தீங்கிழைத்தனனென்பது பொருந்தாது.

ஆயினும், திருவதிகையில் திருத்தொண்டுசெய்த வாகீசர் சமணர்கையில் அகப்பட்டுப் பல்லவனிடம் கொண்டுபோகப்பட்டது வாஸ்தவம் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. சேனை சமுத்திர பலமுடன் வந்த வமைச்சர்கள் சாமோபாயத்தால் தங்கள் காரியத்தை முடித்தனர். இன்றேல், திருநாவுக்கரசைப் பரவும் அடியார்குழாம் நிறைந்த † திருவதிகை நகராருக்கும் பல்லவன் சேனைக்கும் பெரும்போர் விளைந்திருக்கும். அவ்வாறு உயிர்ச்சேதம் தன்னால் நேரலாகாதென்று எண்ணித் திருநாவுக்கரசு இனிவரும் வினைகளுக்கு எம்பெருமான் துணையுண்டென்று சென்றனர். மந்திரிமார், தந்திரத்தால் திருநாவுக்கரசைப் பல்லவன் நகரத்தில் ‡ சிறையில் வைத்துப் பல கொடுமைகள் செய்வாராயினர். சமண நகரத்திலே நடந்த விருத்தாந்தங்களைத் தெரிவிப்பதே அப்பருக்குப் $புறங்கூறுதலாய்க் காணப்பட்டது. கொடியவர்களையும் அப்பர் பழிப்பவரல்லர். ஆதலால் நடந்த விருத்தாந்தங்களில் முக்கியமானவையே உலகத்தோ

* அருள்கொண்ட வுணர்வின்றி நெறிகோடி யறிவென்று
மருள்கொண்ட மன்னவனும் மந்திரிக டமைநோக்கித்
தெருள்கொண்டோ ரிவர்சொன்ன தீயோனைச் சேறு
[வதற்குப்
போதுள்கொண்டு விடாதென்பாற் கொடுவாரு மெனப்
[புகன்றான் (90)

அரசனது பணிதலைநின் றமைச்சர்களு மந்நிலையே
முரசதிரும் தானையொடு முன்சென்று முகில்சூழ்ந்து
விரைசெறியுஞ் சோலைசூழ் திருவதிகை தனைமேவிப்
பரசமயப் பற்றறுத்த பான்மையினார் பாற்சென்றார். (91)

—பெரியபுராணம்.

* "எஞ்சும்வகை யவற்கிலதேல் எம்முயிரும நின்முறையும்
துஞ்சுவது திடமென்றார் சூழ்வினையின் துறைநின்றார்.
—பெரியபுராணம் 107.

† பரசுங்கருணைப் பெரியோ னருளப்
பறிபுன்தலையோர் நெறிபாழ் படவந்
தரசிங்கருள் பெற்றுல குய்ந்ததெனு
வடியார் புடைசூழ திகைப்பதிதான்
முரசம்படகந் திடிதண் ணுமையாழ்
முரவங் கிளைதுந் துமிகண்டையுடன்
நிரைசங்கொலி யெங்கு முழங்குதலால்
நெடுமா கடலென்ன நிறைந்துளதே ஷை —76.

‡ அஞ்சைக் களத்துள்ளா ரையா றுள்ளார்
ஆரூரார் பேரூ ரழுந்தூ ருள்ளார்
தஞ்சத் தளிக்குளத்தார் தக்க ளூரார்
சாந்தைய யவந்தி தங்கி னார்தாம்
நஞ்சைத் தமக்கமுதா வுடைய நம்பர்
நாகேச் சரத்துள்ளார் நாரையூரார்
வெஞ்சொற் சமண்சிறையி லென்னை மீட்டார்
வீழி மிழலையே மேவி னாரே
—திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் 8.

$ பேச்சொடு பேச்சுக் கெல்லாம்
பிறர்தமைப் புறமே பேசக்
கூச்சிலே னாத லாலே
கொடுமையை விடுமா றென்றேன்
நாச்சொல்லின் நாளு மூர்த்தி
நன்மையை யுணர மாட்டேன்
எச்சனே னின்று மெய்யே
னென்செய்வான் தோன்றி னேனே
—குறைந்த - திருநேரிசை 6.

ருக்கு எட்டியனவாம். அவை தாம், நீற்றறையிலிடப்பட்ட *கொடுமை, நஞ்சூட்டியது,வேழத்தால்கொல்ல முயன்றது, முதலியன. சேக்கிழார்பகர்ந்தலவ்வொன்றும் அப்பர்தேவாரத்தில் ஒருவாறு குறிப்பிடப்பட்டிருப்பதால் ஒன்றும் கட்டுக்கதையன்றென்றும் உண்மையில் நடந்த விஷயங்களென்பதும் வற்புறுத்திமொழியலாகும்.

அப்பர் நீற்றறையி லிடப்பட்டும் † பிழைத்திருப்பதைக் கேட்ட பல்லவன் விஷமூட்டக் கட்டளையிட்டான். சிவபெருமான் கருணையால் நீற்றறை தணிந்ததென வறியா மூடச் சமணர் பாலடிசிலில் நஞ்சைக் கலந்திட்டனர் ‡. இதற்கும் சாகாமலிருந்தனர் தருமசேனரெனச் சமணர் கூறி, 'அந்தோ! உன் ஆட்சிக்கும் இனி யிடையூறு வந்த'தென்றார். மதிகெட்ட மன்னவண், கபாலியின் அடியார்மேல் "கடக்களிற்றை விடுகென்ன', அத்தீயோரும் ஒரு மதயானையை அப்பர்மே லேவினர். எவ்விதக் கொடிய ஜந்துவையும் சாந்தம் செய்யும் தமிழ்ப் பண்களில் திருநாவுக்கரசு யானையை வசம்செய்யக்கூடிய காந்தரமென்னும் பண்ணமைந்த பாசுரங்கள் பாடலானார். அப்பதிகத்தின், நாதம்கேட்ட வேழம் அப்பரைக்கண்டு நடுங்கி அவரை வலம்வந்து பணிந்து சென்றது $. அச்சமயத்தில் மீண்டும் ஏவிய யானை பாகர்களையும் மற்றுமுள்ள சமணர்களையும் கொன்று ஓடிப்போய்விட்டதென்று பெரியபுராணம் கூறும்.

அப்பர், சமணர்கள் ஏவிய யானை யஞ்சும்படி பாடிய திருப்பதிகம் யாது? "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்" என்றாரம்பிக்கும்திருப்பதிகமா? அஃதாயின், "வீரட்டர்தம் மடியோம் நாம் அஞ்சுவதில்லை ¶ ஓ, களிறே" என்று பாடியிருப்பார். அப்பதிகம் முற்றும் கவனிப்போமாயின், எந்தப் பாசுரமும் களிற்றை முன்னிலைப் படுத்திப் பாடியதாய்க் காணப்படவில்லை. பல்லவிபோல் * முடியும் ஐந்தாம் அடி "அஞ்சுவதுயாதொன்று மில்லை, அஞ்சவருவது மில்லை" என்பதைக் கவனிப்போமானால், இப்பதிகம் பல அடியார்கள் முன்னிலையில் திருவதிகை வீரட்டானத்தில் அவர் மீண்டபோது பாடிய பதிகமென்று அநுமானிக்கலாம். (கர்ண பரம்பரைக் காதையில் நூற்றாண்டுகள் சென்றவாதலால் பல்லோர் பகருங்காலையில் கூட்டல் கழித்தல் பெருக்கலுடன் உண்மை மாறுதல் அடையும் விஷயம் யாவருக்கும் தெரிந்ததே.)

யானையைக்கண்டு பாடியது மாத்திரமன்று; அப்பர் விஷச்சோறுண்ணும்போதும் திருப்பதிகம்பாடி நஞ்சை யமுது ஆகும்படி செய்திருப்பார் அப்பதிகங்கள் நமக்கு கிடைக்கக் கூடியனவல்ல. கிடைக்குமாயின் நமது தமிழ் நாட்டுத் தவப்பயனேயாம். கல்லினோடு பூட்டிக் கடலிற் பாச்சியபோது பாடிய பாடலும் அவ்வாறே.

திருநாவுக்கரசு நாயனாரைக் கல்லோடு பூட்டிக் கடலில் எறியப்பட்ட விஷயம், அப்பர் தேவாரத்திலேயே குறிக்கப்பட்டிருப்பதால் † அதன் உண்மையைச் சந்தேகிப்பதற்கு இடமில்லை. ஆயினும் "நமச்சிவாயப் பதிகம்", அப்பர் அக்காலத்தில் பாடியதா அல்லது எக்காலத்திலாகிலும் அப்பர் பாடியதா என்னும் சந்தேகங்களுக்கு இடங்கொடுக்கின்றது. அப்பர் பாடியிருந்தால் அவர் சிறுபோது பாடிய பதிகமாயிருக்கலாமேயன்றிக் கல்வி முதிர்ச்சியுடைய அக்காலத்தில் பாடினார் என்பது யுக்திக்குப் பொருந்தாது. "கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே' என்ற வாக்கியத்தை நோக்குமிடத்து, கடலிற் பாய்ச்சும்போது பாடியதன்று என்றே காணப்படுகின்றது. இப்பதிகத்தின் சொற்றொடர்கள் திருநாவுக்கரசு நாயனாருடையனவாயும்காணப்படவில்லை. ஓசை, நயம் முதலிய அப்பர் தேவாரத்தில் காணக்கூடியஇலக்கணங்கள், இப்பதிகத்திலில்லை. அப்பர் பாக்கள் வெண்தமிழ் நடைபோல் காணப்படினும், ஒருபதத்தை அவற்றினின்றுமெடுத்துமறுபதம் வைக்க யாவராலும் முடியாது. அங்ஙனம் செய்ய முயன்றால் பாசுர வொளியே மாறிவிடும். நமச்சிவாயப் பதிகமோ அத்தகையதாய்க் காணப்படவில்லை. சொற்கள் வெற்றெனத் தொடுத்தும், மற்றொன்று விரித்தும், மயங்கவைத்தும் ஒழுங்கற்ற போர்வையாய்க் காணப்படுதலால், இப்பதிகம் பெரும்பாலும் வெள்ளிப்பாட்டென்றே எண்ணவேண்டும். ஆயினும் சேக்கிழார் காலத்திலேயே, இப்பதிகம் அப்பர் பாடியதெனக் கர்ணபரம்பரையில் வந்ததால், இதன் இலக்கணத்தை நன்கறிந்த சேக்கிழார், வெள்ளிப்பாட்டென்ற காட்ட மனமிலராய்த் ‡ "துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்திடாது அஞ்செழுத்தோதும்" அப்பர் + "ஐந்தெழுத்தை அன்பொடு பற்றியவுணர்விஞற் பதிகம் பாடினர்" என்றார். அவ்வாறு கூறியது இப்பதிகத்தின் இலக்கணத்தைஆராயவேண்டாமென்பதற்கோ? அப்பர் திருவதிகைவீரட்டானத்தினின்று பல்லவனிடம் கொண்டுபோகப்பட்டதுமுதல் கல்லினோடு பூட்டிக் கடலுள் எறியப்பட்டநாள் வரையில் எத்துணை மாதங்கள் அல்லது வருடங்கள் சென்றன என்பதின் ஆராய்ச்சிக்குப் போதுமான ஆதாரவுகள் கிடைக்கவில்லை ஆங்கிலேயத்தில் ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களில் இரண்டுவிதமான காலவரையறை காட்டும்படி அக்கவி பாடியதுபோல, சேக்கிழார் பெருமானும், அப்பர் சரிதையைக் கவனிப்போர் இருவித காலவரையறையில் காணும்படிக்குப் பெரியபுராணம் எழுதினார். ஒருகாலவரையறையின்படி, சமணர் தீங்குகள் யாவும் அப்பருக்கு 2, 3 நாட்களிற் செய்தொழிந்தனர்போல் காணப்படும். மற்றொரு விதமாய் நோக்குவோமானல், அப்பர் சமணர் சிறையில் பல மாதம் துன்பப்பட்டு மீண்டதாய்க் காணப்படும். ஆங்காங்குத் திருப்பதிகளில் இவரை ஊர்கோலம் கொண்டுபோகும்போது கண்டவர்கள் யாவரும் * தலைமேற் கைகுவித்து இக்கருணைக் கடலுக்கும் சமணர் தீங்கு விளைக்கத் துணிந்தார்களா என்று அதிசயப்படலானார் என்று பெரியபுராணம் கூறும். இவர் புகழ் இருப்புப்பாதை முதலிய சாதனங்களற்ற அக்காலத்தில் தென்னிந்தியாவில் இவர் போகும் நாடுகளெங்கும் பரவியதென்றால், எத்துணைகாலம் பிடித்திருக்குமென்பது நாம் அநுமானிக்கலாகும். இவர் சமணரால் கடலில் எறியப்பட்டவுடன் திருப்பாதிரிப்புலியூரில் ‡ அவரை எதிர்கொண்டழைத்

* i கணக்கி லாரையுங் கற்றுவல் லாரையும்
வணக்கி லாநெறி கண்டுகொண் டாரையும்
தணக்கு வார்தணிப் பாரேப் பொருளேயும்
பிணக்கு வாரவர் பேரெயி லாளரே
—திருப்பேரெயில் - திருக்குறுந்தொகை 2.

ii சொரிவிப் பார்மழை சூழ்கதிர்த் திங்களை
விரிவிப் பார்வெயிற் பட்ட விளங்கொளி
யெரிவிப் பார்தணிப் பாரேப் பொருளேயும்
பிரிவிப் பாரவர் பேரெயி லாளரே
—ஷை— 3.

† i வெப்பத்தின்மன மாசுவிளக்கிய
செப்பத்தாற்சிவ னென்பவர்தீவினை
யொப்பத்தீர்த்திடு மொண்கழலாற்கல்ல
தெப்பற்றும்மிலே னெந்தைபிரானிரே
—மனத்தொகை-திருக்குறுந்தொகை 7.

ii ஊரிலா யென் றொன்றுக வுரைப்பதோர்
பேரி லாய்பிறை சூடிய பிஞ்ஞகா !
காருலாங் கண்ட னே யுன்கழலடி
சேர்வி லார்கட்குத் தீயவை தீயவே
—சித்தத்தொகை-திருக்குறுந்தொகை 7.

iii திருஞானசம்பந்தர் - "வேயுறு தோளி" யென்னும் திருப்பதிகமும் காண்க.

‡ வஞ்ச நஞ்சிற் பொலிகின்ற கண்டத்தர்
விஞ்சை யிற்செல்வப் பாவைக்கு வேந்தனர்
வஞ்ச நெஞ்சத் தவர்க்கு வழிகோடா
நஞ்ச நெஞ்சர்க் கருளுநள் ளாறரே
—திருநள்ளாறு-திருக்குறுந்தொகை 7.

$ மலைக்கொ ளானை மயக்கிய வல்வினை
நிலைக்கொ ளானை நினைப்புறு நெஞ்சமே
கொலைக்கை யானையுங் கொன்றிடு மாதலால்
கலைக்கை யானைகண் டீர்கட வூரரே
—திருக்கடவூர்-திருக்குறுந்தொகை 7.

¶ கர்ண பரம்பரைக்காதையை, (அப்பர் தேவாரத்திற்கு) கூடியவாறு சேக்கிழார் ஒட்டிப் பாடினார். நம்மதசம்பந்தம் நீக்கி ஒத்திட்டுப் பார்த்தால் சேக்கிழார் சொல்நயம் விளங்கும்:—

(i) அண்ண லருந்தவ வேந்த ரானைதம் மேல்வரக் கண்டு
விண்ணவர் தம்பெரு மானை விடையுகந் தேறும் பிரானைச்
சுண்ணம்வெண் சந்தனச் சாந்து தொடுத்ததி ருப்பதி [கத்தை
மண்ணுல குய்யவெ டுத்து மகிழ்ச்சியு டன்பாடு கின்றார்
—105.

ii. வஞ்சார் விட்டசினப்போர் மதவெங் களிற்றினைநோக்கி
செஞ்சடை நீண்முடிக் கூத்தர் தேவர்க்குத்தேவர்பி ரானை
வெஞ்சடை மூவிலைச் சூலவீரட்டர் தம்மடி யோநாம்
அஞ்சுவ தில்லையென்றென்றே யருந்தமிழ் பாடியறைந்தார்
—பெரிய புராணம் 106.

* iii "...கெடிலப் புனலுமுடை யாரொருவர் தமர்நாமஞ்சுவதியா தொன்றுமில்லை யஞ்சவருவது மில்லை.

† திருநீலக்குடி-திருக்குறுந்தொகை 7.

‡ அப்பர் தேவாரம்-திருநனிபள்ளி-திருநேரிசை 5.

+ சொற்றுணை வேதிய னென்னும் தூய்மொழி
நற்றமிழ் மாலையா நமச்சி வாயவென்
றற்றமுன் காக்குமைந் தெழுத்தை யன்பொடு
பற்றிய வுணர்வினாற் பதிகம் பாடினர்-பெரியபுராணம்.

துச் செல்ல அடியார்கள் சமுத்திரக்கரையில் கூடியிருந்தனரென்பதாலேயே, அதற்குப் பலநாள்களுக்கு முன்னரே, அவர் "திருநின்ற செம்மை" அந்நகர் அறிந்திருக்கலாம் என்றும் கூறலாகும். ஆகையால் சமண் சிறையில் பல நாள்கள் அப்பர் வைக்கப்பட்டார் என்பதற்குச் சில அடையாளங்கள் பெரியபுராணத்திலும் தேவாரத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

சமணர் சிறையினின்று மீண்டபின்னர் திருநாவுக்கரசு நாயனார் தமிழ்நாட்டில் யாவரும் பரவ அவர் எங்குச் சென்றாலும் அடியர்குழாம் பின் செல்வதாயிற்று. ஆயினும் திருஞானசம்பந்தரைப்போல் சிவிகையூர்ந்து இவர் எங்கும் செல்ல உடன்பட்டவரல்லர். பாதசாரியாகவே திருப்பாதிரிப்புலியூரினின்று திருவதிகை வீரட்டானத்தைப் பல க்ஷேத்திரங்கள் மார்க்கமாய்ச் சென்று அடைந்தனரென்று சேக்கிழார் கூறுகின்றனர் திருவதிகை வீரட்டானத்தினின்று பல்லவன் நகருக்குக் கொண்டுபோகப்பட்டவராதலால், மீண்டு திருவதிகைக்கு வந்தனர் என்பது யுக்திக்கும் பொருத்தமாய்க்காணப்படுகின்றது போல் லாங்கு புரிந்த சமணர் சூழ்ச்சி யாவருக்கும் வெளிப்படையில் காணப்பட்டதும், சிவபெருமான் அருள் பெற்றவர் அப்பர் என்று கண்ட பல்லவன், திருநாவுக்கரசை திருவதிகையில் வந்து பணிந்து தான் செய்த குற்றங்களை மன்னிக்க வேண்டியதுடன் சமண் பள்ளிகளை யிடித்துக் குணதரவீச்சரமென்னும் திருக்கோயில் திருவதிகையில் கட்டினனென்பதும் காண்கிறோம் அப்பர் குணதரவீச்சரத்தின்பேரில் பாடிய பாடல்கள் ஒன்றும் தேவாரத்தில் காணப்படவில்லை. ஆயினும் குணதரவீச்சரக்கட்டடமே தமிழ் நாட்டுக்குப் புறச் சமயத்துன்பமொழித்த கோயிலாய்த் திருநீறு பரவச் செய்வதற்கு அடிப்படையாய் விளங்கலாயிற்று. இதினின்றே அப்பர் சிவஸ்தல யாத்திரைகள் செய்யலானார். யாத்திரை ஆவலே இந்நாளில் பாடிய திருவங்கமாலையிலும் காண்கின்றோம் :—

கால்களாற் பயனென்-கறைக்-கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ்சூழாக் கால்களாற் பய [னென்

என்று தென்னிந்தியாவிலுள்ள திருப்பதிகளை ஒவ்வொன்றாய்த் தரிசித்துப் பாடலானார்.

* கண்டார்கள் கைதலைமேற்
குவித்திந்தக் கருணை கண்டால்
மிண்டாய செய்கைய மண்கையர்
தீங்கு விளைக்கச் செற்றபின்னும்
முண்டாயின வண்ண
மெவ்வண்ணமென் றுரைப்பார்கள்
தொண்டாண்டு கொண்ட
பிரானைத் தொழுது துதித்தனரே
—பெரிய புராணம் 14[illegible].

‡ அத்திருப் பதியினி லணைந்த வன்பரை
மெய்தவக் குழாமெலா மேயி யார்த்தெழ
வெத்திசை யினுமர வென்னு மோசைபோற்
றத்துநீர்ப் பெருங்கடல் தானு மார்த்ததே —ஷை 132.

ஏமாங்கதத் திளவரசன்.

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

1. கண்ணிற் கோரு மண்.

115 பக்கத் தொடர்ச்சி

வாசவனுக்கும் பஞ்சரவல்லிக்கும் தனித்தனிப் பொருளில் கன்னிவேட்டை யாகிய அத்தினம் உதித்த நல்லன்பு நாடோறும் வளர்வதாயிற்று. இவர்சந்திக்காத தினமில்லை. யுத்த ஆயுதங்களைப் பிரயோகிக்கும் விதங்களைப்பற்றி இவர் தம்முள் பேச நேர்வது இயல்பே.இதனிலிருந்து,தானும் தனக்கினியஅச்செம்மலும் ஒருசாலை மாணவர் ஆதல்வேண்டும் எனும்சந்தேகம் பஞ்சரவல்லிக்குத் தோன்றியது. இந்தச் சந்தேகத்தை ஆராயப்புகுந்த அவள், தோழியர்உதவியால் அவ்வீரன் தான் அயிர்த்தவாறே வாசவ இளவலென்பது அறியலானாள். அறிந்ததும், "என்னுயிர்க்கு நாயகன் ஏழையேன் கைக்கெட்டாக் கோமகன் நிலையில் உயர்ந்து போயினனன்றோ! இனித் தெய்வமே, யாது செய்வேன். காட்டி மறைக்கும் விதியே, ஐயகோ!" என மிகவருந்தினளாய் அவள் தலைமகனைச் சந்தித்தவன்றே காவு வெளியாயதெனினும் இருவர் காதலும் நிறைவொழிய எந்நாளும் குறைவு பட்டதில்லை. இனிக் களவினில் ஒழுகாது ஆன்றோர் அறியத் தம் மணவினை முடிதற்கு ஆவன செய்வதென்று சிந்தித்தனர். வாசவனும் அன்னையின் சார்பாய் அரசனைக் கேட்கச் சிங்கமுகன் "மைந்த, நினக்குரிய மணாட்டி கோமகள் ஒருத்தியே யாவாள்; ஆயின் என்! உன்னெஞ்சம் நாடிய காதலை வஞ்சிக்க யானோ இசையேன் நமக்கடங்கிய சேனைத் தலைவனது மகளே யாயினும் பஞ்சரவல்லி நல்லள். அழகின் சிறப்பிலும் குணசீலத்திலும் கலையின தகலத்திலும் அப்பெண்ணைப்பாள் பெண்கிடைப்பதரிது," என்று அன்போடு கூறினான். எனினும், மெய்க்காதல் பாய்ந்த வழிதான் என்றைக்கும் மிருதுவாய்அமைந்ததில்லையே!

புஜங்கனது செவிக்கு இச் செய்தி எட்டியதும் மண்வெறி பிடித்துழன்ற அம்மதியிலி இதுவே நியமாய்த் தன் பேராசையை நிரப்பக் கருதினான். படுகொலையாயினும் திருமணமாயினும் எதுவாயினும் அவனுக்கு அரசு பெறுவது ஒன்றே வேண்டும். பஞ்சரவல்லி துணிந்துசெய்த வேட்டையில் நாயகன் பெற்றாளென்றால் தனக்கு நாடும் தேடிவைத்தாள் என்றிவன் மனமுவந்து இருந்தான். இவ்வாறு இருந்தவனைச் சிங்கமுகன் வரவழைத்துப், "புஜங்க, இதுகாறும் எமக்கு நண்பனும் நம் அணிக்

குத் தலைவனுயும் நேர்ந்ததுடன் அமையாது இனி நீ எம் உறவினனும் ஆக விழைகின்றேம், நின் செல்வப் புதல்வியை எம்மகற்கு இனிதின் தருதி,'' என்று வேண்டலும், "அரசே, அது தருவதொன்றன்று. கண்ணிலாக் காதலால் நம்மிரு சிறுமக்களும் விழைந்துளரேனும், நிலைமாறி மணத்தலால் எண்ணித் துணிந்திலேம் எனப் பிற்காலம் தத்தமை நொந்து வருந்துவர். ஆதலால், முதலிற் சிறிது துன்பத்திற்கு இடமிருப்பினும் மேல் விளைவது கருதி உலக இயல் உணர்ந்த நாம் இம்மணவினையைத் தடுப்பது கடமை. சிறியேன் என்னை, அரசே, அடிமையாகவே என்நாளும் ஆட்கொள்வது ஒன்றுமே அமையும்,'' என மறுத்துப் போந்தனன். நாள் சில கழிந்தன. இளவரசனும் பஞ்சரவல்லியும் தியக்கம் உற்றுத் தனித்தனி வாடிக் கிடந்தனர். இப்பிரிவுநிலைக்கு ஆற்றுத கோமகன் ஒருபகல் புஜங்கனைத் தனியிடம் சேர்ந்து தன்மனத்துள்படும் துன்பமெல்லாம் சாற்றி, "ஏமாங்கதத்திற்கிறைவன் சிங்கமுகன் ஒருதனிக் கோமகன், ஐய, யான் நின் செல்வப்புதல்வியின் காதலை இரக்கின்றேன். மறுக்கற்க. உலக இயல் இது வென்றாம் மானுட இயற்கை அது வென்றாம் வம்போதி எந்நம் வாழ்நாளைப் பாழாக்கிப் பழிதேடாய்,'' என்று தொழுதனன்.

கருமத்திற்கேற்ற காலம் பார்த்திருந்த அக்கபடன், "இளையோய், நீ, கோமகனுயிருப்பதே குறை. யானுமோரரசனுயிருப்பின் எம்மகளை யுனக்குச் சந்தேகமின்றியே அளிப்பேன். பஞ்சரவல்லியை அரசிபாக்குமுன் என்னை அரசனுக்கும் வகையொன்று நாடுவாய். அரசன் நான் அல்லாதவரையில் நின்னுசையும் வீணேயாகும்.''

"இவ்வளவோ! ஆயினென். இப்பெருநாடெல்லாம் நினதே யாக்குகின்றேன். மண்ணேகொள். புஜங்க, நீ பெற்ற அப் பொன்னேயெனக் களித்திடு''.

" வாசவ வள்ளால், என்னே இது! உனதல்லாததை எடுத்து நீ கொடுத்தற்கு எவ்வாறு இயலும்? நின் தந்தையினதன்றோ அவனுள்ளளவும்—நெடிதூழிவாழ்க எம்மிறை—இவ்வளநாடு?''

"வாழ்க மன்னவன். என் மனம் நோகுமெனின் இப் பூதலமுழுதும் எள்ளளவும் எண்ணு எந்தையைக் கொண்டே நின்தலை மகுடம் கவிழ்க்க வைக்கின்றேன் காண் !''

"காதலாம் நறவுண்டு நீ நாதந்தன கழறுகின்றய். உன் தந்தையும் பிச்சனே!.....இளவரசே...இல்லை... ஆம்......ஒருவார்த்தை......கேள், கேள். ஆம், நாட்டிற்பாதி நீ யெனக்காகக் கேள், கொடுப்பின் அன்னதற்குமாறுக நீ பஞ்சரவல்லியை யுன்மனைத் திருவாய்ப் பெறுதலும் கூடும். எனினும் நீ குறைந்தவிலைக்கே யவளைக் கொண்டனையென்பர் அவளது எழில்நலம் மதிக்கும் ஆற்றலார்......ஆம், ஆம், நாட்டிலேபாதி நல்கினுல் அரசற்கு உன்பால் இருக்குமன்பும் நீயென் மகள்பால் காட்டுமருளும் இரண்டையும் சோதித்தது மாகும்.''

இதைக்கேட்டதும் வாசவன், 'கொள்ளென முன்பு கொடுப்பவர் எந்தை' எனத் துள்ளிக்குதித்து அரண்மனை யேகி யரசனைத் தொழுது நிகழ்ந்தன கூறலும், மன்னவன், 'கொடுத்தாலென், வாசவன்வயின் பிறக்கும் மகனது கையில் மீண்டு மிவ்விருபாகமும் சேராது போகுமோ,' என்பதைச் சிந்தித்து அரசிற்பாதி தன் படைத்தலைவனுக்குக் கொடுக்க ஒவ்வினன். வாசவனும் சென்றவாறே துள்ளிவந்து, "மாதுல, புஜங்க வேந்தே, என் மணவினை முடியும் நாள் எந்நாள், எந்நாள்!'' என்று பூரித்த உவகையனுய்த் துளங்கினுன். "மைந்த, நான் முடிதரிக்கு நன்னுட்கு மறுநாள் காண்,'' என்று இயம்பிப் புஜங்கன், முன்னுள் மாவலிபால் இரந்த மண்ணை அளந்துகொண்ட நெடியோன் என வாவிச்சென்று தன் மனையகம் சேர்ந்தனன்.

என்றுமில்லாததொரு பொலிவுடன் உட்புகும் தந்தையைக் கண்டு வியப்பெய்திய பஞ்சரவல்லி எதிர்சென்றழைத்து உற்றது எதுவென வினவினுள். அன்னதற்குப் புஜங்கன், "பஞ்சரா, உன்னையே என் மகளாய்ப் பெற்றபேறு இன்றே அடைந்துளேன். அருந்தவச் செல்வி, யானுமோர் அரசன் இனி. சிங்காதனமுண்டு. நால்வகைச் சேனை எனக்கே உண்டு. நவமணி குயிற்றிய நெடுமுடி யுண்டு. கோயிலுமுண்டு மதிலுண்டு அகழுமுண்டு. இறையும் திறையும் எனக்கு வழங்குவோருண்டு. உண்டு உண்டு எல்லாமுண்டு.'' எனக் களிமகன்போல் பன்னிப்பன்னி அவளையும் இழுத்துக்கொண்டு தன் மனைவி அசோகவதி வைகிய மாளிகை குறுகினுன்.

மதர்த்த முகத்தோடு எதிர்வரும் நாயகனைக் கண்ணுற்ற அசோகவதி பொள்ளென வெழுந்து வணங்கினுள். புஜங்கன் ஆங்கோர் பீடமிசை யமர்ந்து, மனைவியையும் புதல்வியையும் தனதிருபுறத்திலும் இருத்தித் தான் வெகுகாலமாய் வேந்தனுகக் கொண்டிருந்த ஆசையும், அது இன்று கைகூடிய வகையும், இனிக் கண்டவர் நடுங்குறச் சிங்காதனம் ஏறிச் சக்கரம் உருட்டும் முறையும் யாவும் ஏமாப்பொடு சொல்லி முடித்தான். முடித்தபின் பெண்ணின் முகத்தைப் பார்த்தான். இச்செய்தியால் உண்டாகுமென்றுஇவன் எண்ணிய கிளர்ச்சி அங்கில்லை. தாயின்முகமும் அவ்வாறே ஒளியிழந்திருந்தது. இதற்குக் காரணந்தான் யாதோவெனக் கலக்கமுற்று, "யானியம்பியது கேட்க வானளவு காது வளர்ந்திடவேண்டிய நீவிர் முகம்செத்துக் கிடப்பதேன்? ஏ மாதர்காள், நுந்தம் உள்ளத்தின் ஆழத்தில் இப்பொழுது அரும்புகின்ற கள்ளமென்ன?'' என்று சுவையற்றதோர் சிரிப்பினிடையே வினவினன். இருவரும், மவுனத்தில் கலகமில்லை எனும் கொள்கையாலோ, உரைக்கவந்த மொழி அவர் வாயுள் உறைந்திடுவதாலோ, நெடுநேரம் பேசாதிருந்தனர். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான் இந்த எதிர்கால மன்னவன். குடிகளின் கருத்தறிந்து மேல்நாள் அரசாட்சி நடத்த வெண்ணியிருப்பானுயின் இங்குத் தன் மனைவிமக்களின் மனதை உணர்தலே இயலாவகை கண்டு கையற்று விடுதல் வேண்டும். ஆனுல், இத்தருணம் புஜங்கனைப் பீடித்தது இவ்வித இராஜ்ய தத்துவம் ஒன்றுமன்று. தன்னிடம் ஏதோ கேட்பதற்குப் பீடிகையாய் இவ்விருவரும் துன்பக்கோலம் கொண்டு மாயாவித்தனம் செய்கின்றனரெனச் சிந்தித்தான். சிந்தித்து "அசோகவதி, என்னவேண்டு முனக்கு? எதுகேட்பினும் தருகின்றேனென்று நான் ஓராது வாக்களிக்கமாட்டேன். இருப்பினும் உன்வரையில் கைகேசியிடம் கற்ற வித்தையைக் காட்டிவிடு,'' என்று இயம்பவே, அவள் இளகிய நோக்கினளாய், "நாதா, சூதினுல் கவர்ந்த இப்பொன்முடி நின் நெற்றியில் தீயின் கொழுந்தென எரியும், என்பொருட்டும் நின்பொருட்டும் அதனை வெளவற்க,'' என்றனள்.

"ஏ, பேதாய், சூதேது! சொன்னதொன்றும் நின் செவியில் பட்டதில்லையோ! அருளினுல் நமதரசன் அளித்த நாடன்றோ நான் ஆளப்போவது? கைதவத்தால் கிடைத்த தல்லவே.''

"ஆயின், பின்னும் இழிவுடைத்து இச்செயல். இரந்து பெற்றுய்! தா என்று ஏற்று உண்டது அமிர்தமானுலும் நாவிற்குஅது கைப்பே நல்கும். தூரக்கமேனும், நாயகா, நாம் யாசித்து அடைதல் வேண்டா. நீ ஏறுமிச் சிங்காதனம் உனது பரிபவப்பொதியின் பாரத்திற் காற்றுது பாதாளத்தளவு அமிழ்ந்திடும். மானம்நினைந்து இம்மண்ணை உதறிவிடு. என்னிறையே கோதாகக் கழித்துவிடு.''

" மற்று என்செய! பிறந்த நாள்முதல் சாகின்ற வரையில் தொண்டேபூண்டு இவ்வுடலைச் சுமக்கச் சொல்கின்றனையே. அரசில் வைகிப் பிறர் என் அடிதொழு வாழேனேல் இச்சென்மம் எடுத்து என் செய்தேன். விலக்குக் கூறிய நீ அரசுபெற விதியொன்று காட்டினுல் நின்னறிவை வியப்பதும் கூடும்.''

" தலைவ, நீ அறியாததன்று. ஆசைக்கு அடிமையாயினேன் ஏழேழுலகமும் கட்டியாளினும் தன்னுரிமை பெற்றனன் என்பதற் கில்லையே.''

"அம்மே, போதும், உன்தத்வோபதேசம் போதும், எனக்கு வேண்டியது அரசும் ஆட்சியும். ஆதலால், நானெடுத்த இக்கருமத்தைக் கைவிடேன்.''

"கருமத்தைத்தான் கைவிடாயாயின், அதற்கு வஞ்சனையும் யாசகமும் கலந்த இவ்வழியையேனும் விட்டொழித்தல் ஆகோதோ! கொடுங்கோன் மன்னர் எவரேனும் உளரேல் அவரை நின் தோள்வலியால் வென்று உன்மனத் தாசையைப் பூர்த்திசெய்துகொண்டால் என்? இதிற் பழியுமில்லை. அந்நாட்டுக் குடிகளைக் காத்ததும் ஆகுமே!.''

"மதியிலி என்றுல், அசோகவதி, நினக்கே தகும். ஆகாத காரியத்தை அடிப்படையாய்க் கொண்டு விவகரிப்பவர் இம்மாதர். கொடுங்கோன் மன்னனை யான் எங்குப்போய்த் தேடிப்பிடிப்பது! நானுமோர் அரசனல்லாக்கால் அவரோடு போர்வேண்டும் உரிமையெனக்கேது! எனதென்று சைனியமும் இல்லையே. இச்சிங்கமுகனது கொடியின்கீழே போர் புரிந்து வென்றுல் வென்ற நாடும் அவனதேயாகும். நாய் பிடித்தபன்றி வேடனைத்தான்சேருமன்றோ! அல்லாது நானே படைதிரட்டிப் போவதற்கும் இல்லை. எனது தனி உரிமையில் கொன்றுல் அது கொலை. வேறொரு வேந்தன் பேரால் கொல்வதெல்லாம் வீரம்..........''

"பெரும, எனதாருயிர் நாயக, உன்னடி பணிகின்றேன். மானம் இழக்காது அரசொன்று வாய்ப்பதற்கில்லையாயின், இவ்வரசை அறவே யொழித்து மாசிலாவொரு மனமே தனமாய் மன்னி வாழ்வோம். ஐய, எனதன்பைக் கருதியேனும், நாம் பெற்ற இப்பெண்ணின் புகழைக் கருதியேனும் இந்நினைவைக் கழுவுதி. மனைவியர்க்கு மந்திரியின் உரிமை உண்டென்பர். எனதரசே கேள், நீ நாடிய இச்செய்கையில் நன்மையில்லை. வாய்மையுமில்லை! ஆதலால்....''

"ஆதலால்...என்ன ஆதலால்...நீ கேள் அசோகவதி, பலபேசிப் பயனில்லை. மூப்பின் முதிர்ச்சியால் மடமைந்தன் சொற்கேட்டு உலகம் புகழ் ஏமாங்கத நாட்டின் சமபாதி இச்சிங்கமுகன் எனக்கு வழங்க நேர்ந்தது பொங்கிய எனது நற்காலத்தின் செய்கையே. செவ்வி எதிர்ந்தபோது சிறுபுத்தியால் அதைக் கைநழுவ விடும் முழுமூடன் நானல்லன். எற்றே கவர்ந்தோ புஜங்கன் சிரமேல் முடியேறுவது திண்ணம்.''

"என்ன, அக்கணமே நீ என் மனதைக் கவிழ்ப்பதானுலும்...எனதுறவு இழப்பதானுலும்?''

"ஆம்.. என்னசொன்னுய்! ...ஆம், போ. அப்படியுந்தான்...நல்லது, இனி அவரவரிடம் போகலாம்,'' என்று புஜங்கன், வேறொன்றுசொல்லித் தடுப்பதற்கு வகையில்லாமல் முடித்தான்.

தமிழ்ப் பாடம் 59.

[நள வெண்பா]

கலி நீங்கு காண்டம்.

முன்னுரைத்தவாறு நளன் அயோத்திமா நகரஞ் சேர்ந்து அங்கு இருதுபர்னவேந்தனிடம், வாகுகன் என்ற பேரோடு, தேர்த்தொழிலும் மடைத்தொழிலும் செய்பவனுய் அமர்ந்து இருக்க, இங்கு விதர்ப்பநாட்டிலிருந்த தமயந்தி அவனடைந்த தேயத்தைத் தேடி அறிவதற்கு ஓர் உபாயஞ்செய்து தனதரண்மனைப் புரோகிதனை அனுப்பியதை இனிவரும் செய்யுள்களில் காணலாம்.

குறித்துரைத்த வாறக் குலவேந்த னேன்று
மறித்துரையா ளுங்கவனும் வைக—வெறித்தவிள
மான்போல் விழியாண் மகிழ்நனிலை யேதெனவே
ஊன்போ லுயங்குவா ளோர்ந்து. 28.

பதப்பிரிவு:—குறித்து உரைத்த ஆறு அ குல வேந்தன் ஏன்று மறித்து உரையான் ஆங்கு அவனும் வைக வெறித்த இள மான்போல் விழியாள் மகிழ்நன் நிலை ஏது எனவே ஊன்போல் உயங்குவாள் ஓர்ந்து.

பதவுரை.

குறித்து - (மடைத் தொழிலும் தேர்த்தொழிலும் வல்லன் யான் என்று நளன்) குறித்து
உரைத்தவாறு - உரைத்தபடி,
அ - அந்த
குல - சிறந்த
வேந்தன் - இருதுபர்ன அரசனும்
மறித்து - தடுத்து
உரையான் - சொல்லாமல்,
ஏன்று - நளனை ஏற்றுக்கொள்ளவே
ஆங்கு - அவ்விடத்தில்
அவனும் - நளனும்
வைக - வசித்திருக்க,
வெறித்த - மருண்ட
மான்போல் - மானைப்போல்
விழியாள் - பார்வையையுடைய தமயந்தி
மகிழ்நன் - தன் நாயகனுடைய
நிலை - நிலைமை

ஏது - என்னவோ
எனவே - என்றே
ஓர்ந்து - எப்பொழுதும் எண்ணி எண்ணி [ரும்)
ஊன்போல் - (தன்னுடைய) உடலைப்போல் (உயி
உயங்குவாள் - வாடுபவள் ஆயினாள்.

> என்னை யிருங்கானி னீத்த விகல்வேந்தன்
> தன்னைநீ நாடுகெனத் தண்கோதை—மின்னைப்
> புரைகதிர்வேல் வேந்தன் புரோகிதனுக் கிந்த
> உரைபகர்வ தானா ளுணர்ந்து. 29.

பதப்பிரிவு:- என்னை இரும் கானில் நீத்த இகல் வேந்தன்தன்னை நாடுக என தண் கோதை மின்னை புரை கதிர் வேல் வேந்தன் புரோகிதனுக்கு இந்த உரை பகர்வது ஆனாள் உணர்ந்து.

அன்வயம்:- தண் கோதை, "என்னை இரும்கானில் நீத்த இகல்வேந்தன் தன்னை நீ நாடுக" என, மின்னைப் புரை கதிர்வேல் வேந்தன் புரோகிதனுக்கு, இந்த உரை உணர்ந்து பகர்வது ஆனாள்.

பதவுரை.

தண் - குளிர்ச்சிபொருந்திய
கோதை - பூமாலையை அணிந்த தமயந்தி,
"என்னை - என்னை
இரும் - பெரிய
கானில் - காட்டில்
நீத்த - கைவிட்ட
இகல் - பராக்கிரமமுடைய
வேந்தன் தன்னை - நளவேந்தனை
நீ - நீ
நாடுக - தேடக்கடவாய்"
என - என்று
மின்னை - மின்னலை
புரை - ஒத்த
கதிர் - பிரகாசத்தை வீசும்
வேல் - வேலை ஏந்திய
வேந்தன் - விதர்ப்பராஜனுடைய
புரோகிதனுக்கு - புரோகிதனுக்கு
இந்த - இந்த (கீழ்க்காணும்)
உரை - வார்த்தையை
உணர்ந்து - தேர்ந்து
பகவர்வது ஆனாள் - சொல்லலாயினாள்.

குறிப்பு:- இகல் வேந்தன்; கதிர்வேல்; வேல் வேந்தன், என்பன இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள். இகலை உடைய வேந்தன், கதிரை வீசும்வேல், வேலை ஏந்தியவேந்தன், என அவை விரியும்.

> காரிருளிற் பாழ்மண்ட பத்தேதங் காதலியைச்
> சோர்துயிலி னீத்த றுணிவன்றோ—தேர்வேந்தர்க்
> கென்றறைந்தா னேர்நின் றெதிர்மாற்றந் தந்தா
> சென்றறிந்து வாவென்றா டோர்ந்து. [ரைச் 30.

பதப்பிரிவு:- கார் இருளில் பாழ் மண்டபத்தே தம் காதலியை சோர் துயிலில் நீத்தல் துணிவு அன்றோ தேர் வேந்தர்க்கு என்று அறைந்தால் நேர் நின்று எதிர் மாற்றம் தந்தாரை சென்று அறிந்து வா என்றாள் தேர்ந்து.

பதவுரை.

"சென்று - (நீ தேசம் தேசமாக) போய்,
'கார் - கரிய
இருளில் - இருட்டில்
பாழ் - பாழடைந்த
மண்டபத்தே - மண்டபத்தில்
தம் - தம்முடைய
காதலியை - நாயகியை
நீத்தல் - கைவிட்டுப் போதல்
தேர் - தேரையுடைய
வேந்தர்க்கு - அரசர்களுக்கு
துணிவு - மிகவும் துணிச்சலான காரியம்
அன்றோ - அல்லவா!'
என்று - என்று
அறைந்தால் - சொல்லிக்கொண்டு நடந்தால்
நேர் - உனக்கு முன்னாக
நின்று - வந்துநின்று
எதிர்மாற்றம் - மறுமொழி
தந்தாரை - யாராவது சொல்ல நேர்ந்தால் அவரை
அறிந்து - தெரிந்து
வா - வா"
என்றாள் தேர்ந்து - என்று யோசித்துத் தமயந்தி புரோகிதனுக்குச் சொன்னாள்.

விரிவுரை :—நளனுடைய காதில் இவ்வார்த்தைகள் பட்டால் அவன் எப்படியும் எதிர்வந்து பதில் சொல்லுவான் என்ற நிச்சயத்தைக்கொண்டு தமயந்தி செய்த உபாயம் இது. நளனைச் சிறிதும் நிந்தனை சாராமல் தமயந்தி தேர்ந்து சொல்லிய இச்சொற்கள் அவளது குணத்தின் பெருந்தன்மையை மிகவும்நயமாகக் காட்டுகின்றன "காதலியை நீத்தல் துணிவு அன்றோ" என்பதால், "காதலியைக் கைவிட்டுப் போவதற்கு அவர் மனம் என்ன பாடு பட்டதோ" என்று அவன்பால் தனக்கிருக்கும் பரிவையே காட்டுகின்றாள். முன் தன் ஆருயிரும் ஆசையும்போல் தோன்றிய அவன் அடிச்சுவடுகளைக் கண்டபோது தமயந்தி தன்னைவிட்டு அவன் போவதற்கு உற்ற துயரோடு ஊசலாடிய உள்ளத்தை ஊகித்தே சோர்வடைந்தாள். துகிலைக் கவர்ந்துசென்று அந்தரத்தே பொற்புள்ளாய் நின்று, "நன்னாடு தோற்பித்தோன் நானே காண்" எனப் பரிகசித்த கலியைச் சபிக்க வாயெடுத்த இவள், 'புகு நரகம்சேர்வாய்கொல்' என வன்மையை விட்டுக் கூறியதுபோலவோ, நளனை இடித்துரைக்குஞ் சொற்கள் சொல்லியனுப்ப வேண்டியவள் வாயில் அவை அவனுக்குப் பரிந்திரங்கும் மொழிகளாகவே மாறின.

இலக்கணம்.

எழுத்துக்களின் மாத்திரையை முன்னாள் கூறினேன். நெட்டெழுத்துக்களுக்கு உரிய மாத்திரை இரண்டாயிருந்தாலும் அவை சிற்சிலசமயம் அளவெழுந்து மூன்று மாத்திரையளவு உச்சரிக்கப் பெறும். நான்கு மாத்திரையும் பெற்றாலும் பெறலாம். மெய்யெழுத்துக்களில் சில தமக்குரிய அரை மாத்திரைக்கு அதிகப்பட்டு ஒரு மாத்திரையளவு உச்சரிக்கப்பெறும். இவ்வாறு உயிரெழுத்து மாத்திரை மிகுந்து ஒலிப்பதற்கு உயிரளபெடை என்றும், மெய்யெழுத்து மிகுந்து ஒலிப்பதற்கு ஒற்றளபெடை என்றும் பெயர். இவைகளை முன்னாள் பாடத்தில் காணலாம்.

இனி, சில எழுத்துக்கள் சில சமயங்களில் தமக்கு உரிய மாத்திரையைவிடக் குறைந்து ஒலிக்கவும் கூடும். அப்பொழுது அவைகளுக்குக் குறுக்கம் என்று பெயர்.

அவ்வாறு குறுகக்கூடிய எழுத்துக்கள் ஆறு:—

இ உ ஐ ஔ, என்ற நான்கு உயிரெழுத்துக்களும், ம் என்ற மெய்யெழுத்தும், ஃ என்ற ஆய்தவெழுத்தும்.

ஐ, ஔ, என்ற இரண்டு எழுத்துக்களும் உயிர் நெடில்களாதலால் அவை ஒவ்வொன்றிற்கும் உரிய மாத்திரை இரண்டு. ஆனால் நாம் பேசும்போது இந்த இரண்டு மாத்திரையளவு இவைகளுக்குக் கொடுத்துப் பேசுவதில்லை. இது என்ன எழுத்து என்று கேட்டால், இது ஐ, இது ஔ என்று அந்த எழுத்துக்களின் பேரைச் சொல்கின்றபோதுதான் அந்த இரண்டு எழுத்துக்களுக்கும் சுயமாகவுள்ள இரண்டு மாத்திரையையுங்கொடுத்து உச்சரிப்போம். அப்படிக்கல்லாமல் இந்த இரண்டு எழுத்துக்களும் வார்த்தைகளில் சேர்ந்து உச்சரிக்கப்படுகின்ற அளவைக் கவனித்துப்பாருங்கள். தையல், வைரம், ஐவனம் மைனா, என்று ஐ, என்னும் எழுத்து முதலில் வருகின்ற சில வார்த்தைகளை எடுத்துக்கொள்ளுங்கள். எடுத்துக்கொண்டு கவனத்தோடு உச்சரித்துப் பார்த்தால் நெடிலைப்போல் இரண்டு மாத்திரை யில்லாமல் குறைந்து ஒலிப்பதை நம் காது உணரும். வை என்பது வா, என்பதைப்போல் ஒரு நெடில். ஆனபோதிலும் வாரம் என்பதைவிட வைரம் என்பது குறைந்தொலிக்கவில்லையா! அப்படியே தீயல், என்பதைவிடத் தையல் என்பது குறைந்தொலிக்கும். மைனா, என்பதில் மை என்பது நெடில்தான், னா என்பதும் நெடில் தான். ஆனால் அந்த மைனா என்னும் வார்த்தையைச் சொல்லும்போதே, முதலில் இருக்கிற ஐ, என்னும் ஒலியைவிடப் பின்வரும் ஆ என்னும் ஒலி அதிகமாய் உச்சரிக்கப் படுகின்றதல்லவா. ஏனெனில், தமிழ் மொழிகளைப் பேசும் முறையில் ஐ என்னும் நெடில் எவ்விடத்திலும் குறுகித்தான் ஒலிக்கும். வாரம் வைரம் வரம், என்ற மூன்று வார்த்தைகளையுஞ் சொல்லிப்பார்த்தால், வை என்ற எழுத்து, வா என்ற நெடிலைப் பார்க்கிலும் சிறிது குறைந்தும், வ, என்ற குறிலைப்பார்க்கிலும் சிறிது அதிகமாகவும் ஒலிப்பது தெரியவரும். ஏனெனில், இதன் மாத்திரை இங்கு நெடிலைப்போல் இரண்டுமில்லை; குறிலைப்போல் ஒன்றும் அன்று. இரண்டிற்கும் நடுவாக அது ஒன்றரை மாத்திரையே அடைந்திருக்கின்றது.

வைரம் தையல் ஐவனம் மைனா, என்று முன் எடுத்துக்கொண்ட சொற்களெல்லாம் ஐஎன்னும் எழுத்து, சொல்லிற்கு முதலில் வரும் சொற்கள். அங்கே ஐ இரண்டு மாத்திரையினின்று குறைந்து ஒன்றரை மாத்திரை பெற்றது. இனி, சொற்களுக்கு நடுவிலேனும் கடையிலேனும் வரும்போது ஐ ஒன்றரை மாத்திரைகூடப் பெறாமல் குறிலைப்போல் ஒருமாத்திரையே பெற்று ஒலிக்கும். மறையோன் என்ற சொல்லையும் மறவோன், என்ற சொல்லையும் உச்சரித்துப் பாருங்கள். றைக்கும் றக்கும், ஒலி அளவில் ஒன்றும் வித்தியாசம் தோன்றாது. அப்படியே, முதலை, முதலி என்ற இரண்டு சொற்களையும் உச்சரித்துப் பார்த்தால், லி என்னும் குறில் எவ்வளவு நேரம் உச்சரிக்கப்படுகின்றதோ அவ்வளவுதான் லையும் உச்சரிக்கப் படுவதைக் காது உணரும். ஆகையால் ஐ என்னும் எழுத்து, சொல்லிற்கு நடுவிலாவது கடையிலாவது வரும்போது அதன் மாத்திரை ஒன்றே.

இப்படித் தனக்குரிய இரண்டு மாத்திரையைக் கொள்ளாமல் வார்த்தைக்கு முதலில் ஒன்றையும், நடுவிலும் கடையிலும் ஒன்றுமாகிக் குறுகுகின்ற ஐஎன்னும் எழுத்தை இலக்கணநூல்களில் அஃகிய ஐ, என்றேனும் ஐகாரக்குறுக்கம் என்றேனும் அழைப்பர். ஐ என்ற எழுத்து அந்த எழுத்தின் பேரைக்குறித்து நிற்கின்றபோது தவிர மற்றெல்லா விடங்களிலும் குறுகியே ஒலிக்கலாகும்.

ஔ என்ற எழுத்தும் அப்படியே. ஔவை, வௌவால், மௌவல், என்ற இடங்களிலெல்லாம், அது இரண்டு மாத்திரை பெறாமல் ஒன்றரை மாத்திரையளவே உச்சரிக்கலாகும். இதற்கு அஃகிய ஔ என்றேனும் ஔகாரக் குறுக்கம் என்றேனும் பெயர். ஐகார ஔகாரக் குறுக்கங்களின் இலக்கணம் தெரிந்திருப்பது யாப்பிலக்கணம் கற்கும்போது பயன்படும்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

10. மிதிலைக் காட்சிப் படலம்.

விரகத்திலு மேமதன்னை வேதங்களை விளம்பும்.

மின்னனைய மாதரார் எண்ணிறந்தோர் முறைமுறை சேவிக்கப் பெண்மைக் கிறைவியாய்ச் சற்றுமுன் நின்ற சீதை, கோசலக்குரிசிலைக் கண்ணுற்றவளவில் நிறையும் அழிந்துயுணர்வும் ஒழிந்து தன்னையே துறந்த தமியளாய்த் தவிக்கின்ற தன்மையைக் கம்பர்பிரான் குறுநகைபுரிந்து கூறிக் காட்டினார். அன்னவாறு அவள் கன்றிய மனத்தில் உற்ற காம வேட்கையால்,ஒன்றல, பலநினைந்து உருகுங்காலையில்,

84 பக்கத் தொடர்ச்சி

> அன்னமென் னடையவட் கமைந்த காமத்தீ
> தன்னையுஞ் சுடுவது தரிக்கி லானென
> நன்னெடுங் கரங்களை நடுக்கி யோடிப்போய்
> முன்னைவெங் கதிரவன் கடலின் மூழ்கினான்.

[அன்னம்போன்ற நடையையுடைய அவளுக்கு ஏற்பட்ட காமாக்கினியானது தன்னையுஞ்சுட அதைப் பொறுக்கமாட்டாமல் வெப்பமுடைய பழைய சூரியன், தன்னுடைய சிறந்த நீண்டகைகளாகிய கிரணங்களை நடுக்கிக்கொண்டு ஓடிப் போய்க் கடலில் குளித்துவிட்டான்]

தமயந்தியின்பால் வேட்கை உற்றிருந்த "சுடுதழல் கடவுள் மீதும் சுட்டது காமத்தீயே" என்றுரைத்த அதிவீரராம பாண்டியன் கம்பரிடம் இங்குக் கற்றதைச் சிறிது சிறக்கவே பயன்படுத்திக் கொண்டானென்று எண்ணல்வேண்டும்.

சூரியனைத் தானே சுட்டுச் சீதை துரத்திவிட்டாளாதலால் அதன்பலனை அவளே அனுபவிக்க நேர்கின்றது. ஏனெனில், பகலவ னகன்றதும்,

விரிமலர்த் தென்றலாம் வீசு பாசமும்
எரிநிறச் செக்கரு மிருளுங் காட்டலால்
அரியவட் கனறரு மந்தி மாலையாங்
கருநிறச் செம்மயிர்க் காலன் தோன்றினன்.

[மலர்ந்த புஷ்பங்களில் பட்டு வருகின்ற தென்றலாகிய வீசுகின்ற கயிறும், நெருப்பின் நிறத்தையுடைய செவ்வானமும் இருட்டும் தோன்றும்படி செய்வதால், சீதாபிராட்டிக்கு, காமாக்கினியை வளர்ப்பதாகிய அந்திமாலை யென்னும் கரிய நிறத்தையும் சிவந்த மயிரையும் உடைய யமன் எதிர்வந்தான்]

யமனென வந்ததேனும்,

மீதறை பறவையாம் பறையுங் கீழ்விளி
யோதமென் சிலம்பொடு முதிரச் செக்கரும்
பாதக விருள்செய்கஞ் சுகமும் பற்றலால்
சாதக மென்னவுந் தகைத்தம் மாலையே.

[மேலே ஒலிக்கின்ற பறவைகளாகிய பறையும், கீழே ஒலிக்கின்ற கடலாகிய சலங்கையும், செவ்வானமாகிய இரத்தமும், கொடுமை செய்கின்ற இருட்டாகிய கரிய சட்டையையும் கொண்டிருப்பதால், அம்மாலைப்போதானது ஒரு பூதத்தைப்போன்றும் இருந்தது]

யாவரும் எங்கும் இனிதின் எதிர்நோக்கி மகிழ்கின்ற அந்திநேரம் காலனையும் பேயாயும் கண்டது காமநோ யுற்றிருந்த சீதைக்கேயன்றிப் பிறர்க்கன்று. அன்னவட்கு இவ்வந்தியைக் காணவோர் ஐயமுண்டாயிற்று.

கயங்க ளென்னுங் கனறேய்ந்து
    கடிநாண் மலரின் விடம்பூசி
இயங்கு தென்றன் மன்மதவேள்
    எய்த புண்ணி னிடைநுழைய
உயங்கு முணர்வு நன்னலமு
    முருகிச் சோர்வா ளுயிருண்ண
வயங்கு மாலை வானோக்கி
    யிதுவோ கூற்றின் வடிவென்றாள்.

[குளங்களாகிய நெருப்பிலே காய்ந்து மலரின் மணமாகிய விஷத்தைப் பூசிக்கொண்டு உலவுகின்ற தென்றல் காற்றென்னும் வேலானது, மன்மதன் எய்த பாணங்களாலுண்டான புண்களுக்குள் பாய, அதனால் வருந்துகின்ற உணர்வும் அழகும் உருகிச் சோர்கின்ற சீதையின் உயிருண்ணும் பொருட்டு விளங்கிய மாலைவானத்தை நோக்கி, "யமனுடைய உருவம் இதுதானோ" என்றாள்]

தொழிலாலும் உருவத்தாலும் மற்றுஞ்சில அங்கங்களாலும் அம்மாலைப்போது சீதைக்கு மறலியேபோல் தோன்றினாலும் மருண்ட அவள் மதியில் ஒன்றும் நிற்றலின்றி இடையே அதனைச் சாதகம் என வெருவியது போன்றே பின்னு மதனையோர் பையரவெனப் பேசுகின்றாள்.

மைவா னிறத்து மீனெயிற்று
    வாடை யுயிர்ப்பின் வளர்செக்கர்ப்
பைவா யந்திப் படவரவே
    யின்னா விளைத்துப் பகைத்தியால்
எய்வா னொருவன் கையோயா
    னுயிரு மொன்றே யினியில்லை
உய்வா னுறவிப் பழிபூணா
    துன்னோ டெனக்குப் பகையுண்டோ.

[ஆகாயத்தின் கரியநிறத்தையும், நக்ஷத்திரங்களாகிய பற்களையும், வாடைக்காற்றாகிய மூச்சையும், வளர்கின்ற செவ்வானமாகிய திறந்த வாயையும், அந்திக் காலமாகிய படத்தையும் உடைய ஏ கரியநாகமே,எனக்குத் துன்பத்தை விளைத்துப் பகைபாராட்டுகின்றாய். மன்மதன் என்னும் ஒருவன் கையோயாது என்மேல் பாணங்களை யெய்து கொண்டிருக்கின்றான். எனக்கு இருக்கும் உயிரும் ஒன்றே, இரண்டு இல்லை. அதனை நான் அம் மன்மதன் கவராமல் காத்துக்கொள்ள இப்பொழுது பெரும்பாடு படுகின்றவளாயிருக்கின்றேன். இப்படி அவனோடு நான் மன்றாடிக்கொண்டிருக்கப் போர் முறையும் பாராது நீயும் இடையே புகுந்து நலியும் இப்பழிக்கு ஆளாகியேனும் என்னை உய்யாமற் செய்யவேண்டுமென்று நீ நினைக்கும்படி நானுக்குப் பகையொன்றுஞ் செய்ததில்லையே]

அந்திக்குத்தான் ஆற்றாளாகில், இருள்படர்ந்து சூழ்ந்தாலும் சகிக்கமாட்டாள்.

ஆல முலகிற் பரந்ததுவோ
    ஆழி கிளர்ந்த தோவவர்தம்
நீல நிறத்தை யெல்லாரு
    நினைக்க வதுவாய் நிரம்பியதோ
கால னிறத்தை யஞ்சனத்திற்
    கலந்து குழைத்துக் காயத்தின்
மேலு நிலத்து மெழுகியதோ
    விளங்கு மிருளாய் விளைந்ததுவே.

[தலைவனைச்சேராத என் போன்றவர் இளைக்கும்படி இருளாய் விளைந்த இது—விஷந்தான் எழுந்து உலகெங்கும் பரவியதோ! கடல்தான் பொங்கிப் பாய்ந்ததோ! அல்லது வீதியில் யான் கண்ணுற்ற அப்பெருமகனைப் பிறருங் கண்டு என்னைப்போலவே அவருடைய கரிய நிறத்தை அவரெல்லாரும் இடைவிடாது நினைத்தவண்ணமா யிருக்க அவ்வெண்ணத்தின் தொகுதிதான் புறத்திலே பாய்ந்து இருளாக நிரம்பியதோ! அல்லது யமனுடைய நிறத்தை மையோடு கலந்து குழைத்து ஆகாயத்தின்மேலும் பூமியிலும் மெழுகியதோ!]

என்று அவ்வேழை, கடுவோ கடலோ காலன்மேனியோ, மற்றுக் கருநிறமமைந்து கொடுமைசெய் பொருள்களில் யாதோ இவ்விருள், என நைவாளாயினள். இதனோடு நின்றிருப்பாளாயின் புலவர் பெருமான் கம்பரது கையில் வளர்ந்த சீதையின்பால் சிறப்பொன்றுந் தோன்றியிராது. இதுவரையில் வந்த அந்தியின்வருணனைகளில் தற்குறிப் பேற்றமாய்ச் சீதையைக்கொண்டு செய்வித்த உருவகம் பெரும்பான்மை மற்றக் கதைளின் நாயகிகளது கூற்றுடனும் ஒக்கும். ஆனால், கோமுனி எனத்தகைய ஜனகன்தன் நற்றவத்தால் வந்த நங்கை,காதலால் உடலும் மனமும் மெலிருந்திருந்தாளாயினும், நிரந்தரமாய அரும் பெருந் தத்துவங்களைத் தன் கருத்தினின்று தளரப் போக்கினளல்லள். "அவர்தம் நீல நிறத்தை எல்லாரும் நினைக்க அதுவேயாய் நிரம்பியதோ". என்று இருளை நோக்கி ஐயுறவெய்துதற் கியன்றதன்மை இச் சீதையல்லால் பிறர்க்கிருக்கக் காண்பதரிது. உலகினது தோற்றம் மாறுவதும் அமைவதும் ஒருசிலர் சேர்ந்து செய்கின்ற செயல்களாலேனும் வழங்குகின்ற வார்த்தைகளாலும் ஆவதொன்றன்று. அகமே புறம். எண்ணங்களுக்கு உருவமும் சக்தியும் புறத்திலே பரவிப் பயில்கின்ற தன்மையும் உள. ஆதலின் ஒரு காலத்தில் மாந்தருள் பெரும்பகுதியோர் நினைக்கின்ற நினைவுகளின் தொகுதியே வெளியிற் கழன்றுலவி ஒன்றாய்த்திரண்டு உலகத்தின் வாழ்க்கைக்கோர் உருவந் தருகின்றது. சான்றவர்தம் சிந்தனையால் உலகத்தை இன்பநலங்களுக்கியன்ற நெறியில் உய்க்

கின்ற திறம் கையும் வாயும் வல்லுநர்க்கிலது. பெரும்பகுதியோர் சுயநலப் பேராசையெனும் பெரும் பேயையே தம் மனத்தில் நினைத்திருப்பாராயின் உலகத்திலெங்கும் அப்பேய்தானே தன்னினத்தோடும் பரவிப் படரும். மற்று ஈச்வர நினைவு நீங்காத உள்ளத்தவர் அதிகமாயின் உலகெங்கும் வியாபிப்பதும் ஈசுவர ச்வரூபமேயாகும். உலகத்தில் நன்மையுளதெனின் அது சான்றோர் நல் நினைவின் தோற்றமேயன்றி யாவர்தம் செயலாலும் நேர்ந்ததன்று. நல்லன நினைக்கவல்லார் யாதும் செய்யவேண்டியதில்லை. அல்லாதார் செய்தும் பயன்படாது. நம்முடைய நினைவை மாத்திரம் நாம் வெளியுலகில் காண்கின்றோமென்பதில்லை. பிறரது நினைவையும் காணக்கூடும். மானத தத்துவம் இது. இதனை அறிவாள் சீதை. பொய்யில் காட்சியுடைய நல்லோர் ஈசுவரனைத் தமது அன்பினால் கண்டு, அவ்வுருவத்தைத் தம் உள்ளத்தில் ஊன்றித் தியானித்து உலகத்திலெங்கும் அவ்வீச்வரனையே வியாபிக்கும்படி தமது எண்ணத்தை உலவவிடும் தனிப்பெருந் தகைமையை, நன்குணர்வாளாதலால் அச்சனகன் குலமகள் காலனும் கடலும் கடுவுங் கிடக்க எம்பிரானை யாவரும் நினைத்த நினைவின் உருவமும் நிறமுமேயே இப்படரிருள் என அயிர்ப்பதற்கு ஏற்றவளாயினள்.

சீதாபிராட்டி யறிந்தது இதுவொன்று மாத்திரமேயன்று. நமது நினைவுகள் உருப்பெற்று உலவுவது போன்று நமது வினைகளும் உருவங்கொண்டு வந்து உறுத்தவல்லன. அஃதுணர்ந்த இம்மங்கை, அக்காரிருள்வாய்க் கூவியவோர் அன்றிலைக் குறித்துக் கூறுவாள்.

வெளிநின் றவரோ போய்மறைந்தார்
    விலக்க வொருவர் தமைக்காணேன்
எளியள் பெண்ணென் றிரங்காதே
    எல்லி யாமத் திருளூடே
ஒளியம் பெய்யு மன்மதனார்
    உனக்கிம் மாயம் முரைத்தாரோ
அளியென் செய்த தீவினையே
    அன்றில் லாக வந்தாயோ.

[வெளியிலே நின்றவரோ போய் மறைந்தார். நானின்னுங் கண்டுகளிக்குமாறு அவரைப் போகவேண்டாவெனத் தடுத்து நிறுத்தி எனக்கு உதவிசெய்ய முன்வந்தவர் ஒருவரையுங் காணேன். துன்பஞ்செய்வதற்கோ பலர் உளர். நானோ ஒரு பலமற்ற பெண் என்றும் இரங்காமல், இரவிலே நிசிப்போதில் இருட்டில் ஒளிந்து என்மேல் பாணம் எய்து பொருகின்ற பெருவீரர் மன்மதனார்தான், கத்திக்கத்தி என்னைத் துன்புறுத்தும் மாயம், ஏ, அன்றிலே உனக்குங் கற்பித்தாரோ .... அல்லது எளியேனாகிய நான் செய்த தீவினையே,நீதான் அன்றில்என்னும் உருவத்தோடு என்னை நலிய வந்திருக்கின்றாயோ!]

இதுகாறும் தனக்கொரு தீங்குஞ் செய்திராத இப்பறவையால் இன்று ஓர் துன்பம் எய்தியதென்னின் அதற்குக் காரணம் யாவதா யிருத்தில்கூடும் என்று ஆராயும் மதிநுட்பம் உடையவள் சீதை. பிறர் புகுந்து நமக்குத் தீங்கு செய்கின்றனரென்றுதல் செய்யவல்லவரென்றுதல் மதிப்பதினும் பேதைமை மானுடர்க்குப் பிறிதில்லை. நம்மை யாவராலும் நலிதற்கியலாது. ஆவதும் அழிவதுமாகிய இரண்டும் அவரவர் தம்பால் செய்துகொள்ளும் செய்கையேயன்றிப் புறத்திருந்து சிலர் செய்வாரெனல் பிள்ளைமதியின் மயக்கமாம். நாம் செய்தவினையே நம்மைத்தொடர்ந்து அளித்தலும் அழித்தலுஞ் செய்கின்றது. பிறர் இவைகளைச் செய்வதுபோல் தோன்றுவதெல்லாம் பொய்த்தோற்றம். நம்முடைய தீவினைகளே அப்பிறர் என்னும் வேடத்தில் வந்து நமக்குரிய தண்டனையைத் தருகின்றதேயல்லாது வேறன்று. நல்வினையும் அவ்வாறே மற்றவருருவத்தில் வந்து நற்பலன் அளிக்கலாகின்றது. ஈதறிந்தால் நமக்கு வேண்டியவர் யார், வேண்டாதார் யாரே! நம்மை ஒருவன் வந்து அடித்தாலும் நம் பொருளை அபகரித்தாலும், உயிரையே கவர்வதானாலும் அவனை நாம் நோவது நன்றன்று. நமக்குத் தீமையென்ற இவைகளுக்குக் காரணம்போல் காண்கின்ற அவன் கர்த்தா வல்லன். நம்முடைய வினைகள் அவனைக் கருவியாகக்கொண்டு நிகழ்கின்றன. அல்லது, சானகி உரைத்தபடி, இத்தீவினைகளே அவ்வுருக்கொண்டு தோன்றித் தண்டிக்கின்றன.

தெரிந்தொரு தீங்கு நமக்குச் செய்பவர் ஒருவரெனில் தெரியாது செய்பவர் பலர். சீதைக்குத் துன்பம் விளைக்கவேண்டுமென்ற கருத்தோடு கூவியதன்று அவ்வன்றில். தெரிந்தேனும் தெரியாமலேனும் வெளிநின்று நேர்வனபோல் தோன்றுகின்ற தீங்கெல்லாம் துன்பம் யாவும் அளியன் செய்த தீவினையேயன்றி வேறன்று. மற்றுப் பிறர்மாட்டுப் பகையேன், கோபமேன், தாபமேன், நம்மைக் கடிகின்றான் என்று எதிர் கடியக் கொதிக்கின்றதேன்! நம்மைப்பிறர் கடியக்கடிய நாம்செய்த தீவினை கழிகின்றதென்று மகிழவேண்டியவர்களா யிருக்கின்றோம். அல்லாக்கால், "அம்மம்ம, எத்துணைத் தீவினை செய்துளேன் பாவியேன் யான்" எனப் பகைப்பதெனின் நம்மையே பகைக்கத்தான் அமையும். "உன்னை யொருகன்னத்தி லடித்தாற்கு மறுகன்னத்தையும் அளித்துநில்" என்றார் ஒரு உத்தமர். "அளித்த கன்னத்தில் அவன் அடியானாகில் நீயே அடித்துக்கொள்" என்பதும் தக்கதோர் மதியேயாகும்.

காதல்நோய் உற்ற சீதை "அவர்தம் நீல நிறத்தை எல்லோரும் நினைக்க அதுவேயாய் நிரம்பியதோ", என அயிர்த்ததும், "அளியென் செய்த தீவினையே அன்றிலாக வந்தாயோ" என வினவியதும் ஆப இவ்விரு வாசகங்களையும் உன்ன உன்ன உலகம் உய்யும். மக்களின் நல்வாழ்விற்கு வித்தாய மூலமந்திரங்கள் இவை. சிங்காரத்தினிடையே இத்தகைய தத்துவங்களைச் சுவையுங் கெடாமல் சேர்த்துச் சித்தரிக்க வல்ல துணிவு கம்பர்தாக் கவிகளுக்கே அமையும். இதே கருத்தை அதிவீரராமபாண்டியன் எடுத்தாண்டு

அந்தா மரையின் மடநல்லீர்
    மலய முயிர்ப்ப வலர்பொதுளும்
சந்தா டவியிற் றவழ்ந்துநறுந்
    தண்ணெ னருவி தோய்ந்துமலர்ப்
பைந்தா தாடி முருகுயிர்த்துப்
    பசும்பொற் சிறுசா ளரநுழையு
மந்தா நிலமின் றழல்வதெல்லாந்
    தமியே னிழைத்த வல்வினையே

[அழகிய தாமரையில் வசிக்கின்ற இலக்குமிபோன்ற என் தோழிமார்களே, பொதியமலைபெற, மலர்கள் நிறைந்த சந்தனக்காட்டிலே தவழ்ந்து, நல்ல குளிர்ந்த அருவிநீரில் குளித்து, மலர்களின் பசுமையான மகரந்தப்பொடிகளைப் பூசிக்கொண்டு, நம் சிறிய பைம்பொன் சாளரத்தின் வழியாய் நுழைகின்ற இந்தத் தென்றற்காற்றானது, இன்று சுடுவதெல்லாம் எளியேனாகிய யான் செய்த தீவினையே]

என்று தமயந்திபைச் சொல்வித்தார். தென்றலிற் கோர் பிள்ளைத்தமிழ் சுருங்கப்பாடிய நயம் பெரிது இதனிலுளதேனும் அக்காரணத்தினுலேயே, "அளியென் செய்த தீவினையே அன்றில் லாக வந்தாயோ" என்ற வாசகத்தில் அடங்கிய தத்துவத்தின் கட்டுக் கலைந்துவிட்டது. வில்லியம் பார்னேஸ் (William Barnes) என்றவொரு ஆங்கிலப்புலவர் பாடியவோர் பாசுரத்தில்

"And many times, when I do find
Things go awry, and folk unkind
....
....
For I do see that 'tis our sin
Do make one's soul so dark 'thin
When god would give us sunshine"

என வந்திருக்கும் அடிகள் கம்பரின் கருத்தினை ஒருசிறிது தம்முளே கொண்டிருக்கின்றன.

தங்கையால் சொல்லக் கேட்டுச் சீதைபால் மையல் கொண்ட இராவணன் விரகநோயுற்று வருந்துமிடத்திலும் கம்பர், "இன்பமுந் துன்பந்தானும் உள்ளத்தோடியைந்த வன்றே" என்றும், "காலத்தால் வருவதொன்ருே, காமத்தால் கனலும் வெந்தீச் சீலத்தால் அவிவதன்றிச் செய்யத்தான் ஆவதுண்டோ" வென்றும் சில உண்மை வாசகங்கள் உரைப்பவராகின்ருர். எனினும் வேதமே யெனத்தகைப இவ்வாக்கியங்களை இங்குச் சீதையேயுரைக்கப் பிறன்மனைவிழைந்த பாவியின் வாயில் இந்நல்லுரை நேர்தற்கு இசையாத கம்பர், அவைகளைத் தன்னுடைய கூற்ருகவே கூறக் கேட்கின்ருேம்.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

சில ஐயம்.

முன்னேனிருப்பப் பின்னேன்மண்ணுளல் முறையன்றெ‌ன அறம்வேட்டு, மறம்நீத்து முத்தமிழாண்ட வித்தகப் புலவராய இளங்கோவடிகள் அருளிய சிலப்பதிகாரமே நம் செந்தமிழன்னையின் சிறப்புறு அணிகலங்கள் யாவும் வைக்கப்பெற்றிருக்கும் சேமப்பெட்டகமாகும். தண்டமிழ் நாட்டின் பண்டையநிலைமையை யறிதற்கு இதைப்போல் துணைசெய்யும் நூல்கள் நம் தமிழ்மொழியில் மிகச்சிலவே. சீரிய கல்வித் திறனெடு சிற்பத்தொழில் பிற செய்தொழில்களும், நேரிய சமரில் கூரியமதியில் நிறைதரு வாணிப நெறியில் நம் முன்னோர் வாழ்ந்த வகையை விரித்துக்கூறிச் செல்வதில் இந்நூலே முதன்மையாக நிற்கின்றது. அக்காலத்திருந்த சிற்றூர், பேரூர், காடு, மலை, யாறு முதலியவற்றைக் கூறிச் செல்லுந்தன்மை நெஞ்சைக் கவர்கின்றது. "நெஞ்சையள்ளுஞ் சிலப்பதிகார மென்ருேர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" எனக் கூறிப் போந்தார் நவீன கவியரசர். இங்ஙனம் போற்றப்படற்குக் காரணம் அக்காலத் துள்ளவற்றை மிகையுங் குறையுமின்றிக் கூறிச் செல்லும் நேர்மையாகும். இம்முறையே நின்ருெளிர்வன சங்கநூற்களும் அவற்ருெடு தொடர்புடையவும். இச்சிலசிறு உண்மை விளக்கங்களேனும் பெற்றிலேமாயின் இருள் செறிந்த அக்கால நிலைமையை யெவ்வாறு உணர்தல்கூடும்? இங்ஙனமாக, "பொய்யாற் பொலிவது புலமை" யென்னுந் தலைப்பொடு சென்ற ஆண்டு இறுதியிதழ்களில் ஆங்கிலத்தினின்றும் மொழி பெயர்க்கப்பட்ட, உரையாடல் வழியாயமைந்தவோர் கட்டுரை "வசிரில்" என்பானுக்கு எவ்வாறு வியப்பளித்து நின்றதோ, அங்ஙனமே "கலாநிலய"த் தோழர்களிற் பலர்க்கும் வியப்பூட்டி யிருக்குமென்றே கருதுகின்றேன். எனினும், அக்கட்டுரையிறுதியில் "நானுமிங்கு அழகான பொய்கள் பல......பேசிவிட்டேன்" என முடிவதால் அக்கட்டுரை "வெற்றுரை" யேயன்றி, யாவர்க்கும் நற்றுரையைக் காட்டும் ஓர் நல்லுரையன்று என்பது போதருகின்றது. நம் தமிழகத்தும் "பொய் பிறந்தது புலவர் வாயினில்" எனவோர் சிறுமொழி வழங்கி வருகின்றது. எனின் இம்மொழி யக்கட்டுரையின் முற்றுரையைத் தழுவி நிற்கின்றது என்பதற் கிடனில்லை. இதுபொழுது அம்மொழி வெம்மொழியாகவே வழங்கப்படுகின்றது. இங்ஙனம் வழங்கற்கேதுவாக நின்றவர் அண்மியகாலத்துப் புலவரும் தற்காலச் சிலருமே. மிடுக்கிலாதானை வீமனேயென்றும், கொடுக்கிலாதானைப் பாரியேயென்றுங் கூறின் அப்புலமையாற் போந்த பயன் யாதோ? இல்லாத சொன்னவர்க்கு "இல்லை"யென வெறுங்கையனுப் போகவிடுத்த செல்வனே புலவனுவான். பரிசில் பெறுதற்குவந்து பொய்மொழி புகன்ற புலவன் கூற்றினும் கழிபெரும் வியப்பூட்டி நிற்பது உண்மையை மொழிந்த செல்வன் கூற்றேயன்ருே? இத்துணை தூரம் இது குறித்தெழுதியது பண்டைக்காலப் புலவர் பெருமக்கள் இயற்கை நெறிவழாது நூல்கள் எழுதியதும்; இடைக்காலத்தும் தற்காலத்தும் வாழ்ந்தவர்கள் அந்நெறிபிறழ்ந்து நின்றதுவும்; அதனுல் முன்னையவற்றினும் பின்னையவை பல படி தாழ்ந்து நிற்றலும் காண்கின்ருேம்.

பண்டைக்காலத்தே தோன்றி, அக்கால நிலைமையை ஆடியி னினிது விளக்கிநிற்கும் சிலப்பதிகாரம் இளங்கோவடிகள் செய்தனரென்பதும், செய்தற்கு ஏதுவும் பிறவும் அந்நூற்பதிகத்தால் அறியக் கிடக்கின்றன. பொதுவாக ஒரு நூற்குப் "பதிகம்" கூறுவோர் பிறராதல்வேண்டுமேயன்றி அந்நூலாசிரியரே மொழிதல் தகவன்றென்பது தமிழ்வழக்கு. எனினும்சிறுபான்மை நூலாசிரியர் தாமே தம்மைப் பிறன்போலும் பாயிரங் கூறல் உண்டென்பதும்; அதற் கெடுத்துக்காட்டாகச் சம்பந்தர் சடகோபர் முதலிய பெரியாரருளிய பாக்கள் பொலிகின்றன வென்பதும் உண்மையே. சிலப்பதிகாரத்தை முன்னின் றணிசெய்யும் பதிகம் இளங்கோவடிகளே இயற்றினரென அதற்குரைகண்ட அடியார்க்கு நல்லார் ஆங்காங்கு சுட்டிச் செல்கிருர். [பாடல் சால் சிறப்பிற் பாண்டியன்.— சிறப்பிற் பாண்டியன் என்றும்; பெருஞ்சீர் மாடமதுரை யென்றும் அடிகள் புகழ்ந்தார். யாவதும் சினையலர் வேம்பன் தேரானுகி.— முன்னர்க் கைகுறைத்தன் முதலிய முறைசெய்தோன் இதனைத்தேர்ந்திலன் என்று அடிகள் இரங்கிக் கூறினர்.]

தாமே தந்நூற்குப் பதிகங் கூறிச் செல்லல் சிறுபான்மை மரபாயினும், அது கருதித் தாம் எத்துணை

மேம்பாடுடையரா யிருப்பினும் தம்பெருமையைத் தாமே கூறிக்கொள்ளல் எங்ஙனம் முறையாகும்? "உரைசாலடிகளருள, மதுரைக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்" என்பது அப்பதிகத் திறுதிமொழிகள். விருப்பு வெறுப்பற்ற வப்பெரியார் தம்மை "உரைசாலடிகள்" என்றும், மற்றப்புலவரை வெறுங் "கூலவாணிகன் சாத்தன்" என்றுங் கூறியிருப்பாரா?

இச் சிலப்பதிகாரத்தை மதுரைச் சாத்தனுர் அடிகளை யியற்றியருளுமாறு கேட்டன ரெனவும், அடிகள் அருளினுரெனவும் பதிகத்தா லறிகின்ருேம். உரையாசிரியரோ மதுரைச் சாத்தனுர், அடிகளின்மனத்தூய்மையில் ஐயுற்று, 'முடிகெழுவேந்தர் மூவர்க்குமுரிய இச் சிலப்பதிகாரத்தை யாமே யியற்றக் கருதியுள்ளோம்; அன்றி நீரே யருளுகின்றீரா?" என இருபொருள் தந்து நிற்குமாறு "நீரேயருளுக" என வினவினரென்றும், அதற்கு அடிகள் அவரது பொருளிற்குடன்படாது சொல்லிற்குடன்பட்டு அருளினரென்றும் கூறுகிருர். இவ்வுரையாசிரியரே பதிகத் தொடக்கத்து 'மணிமேகலை துறந்தாளென்ப துணர்ந்து அத்துறவினைப் பின்வைத்து, அதனேடு நாற்பொருளும்பூரித்துப் பெருங்காப்பியமாக முடித்தலைக் கருதி அடிகள் சாத்தனுர்க்கு இவ்வுரையை யுரைத்துழி, அவர் மணிமேகலை பெயரான் அவள் துறவே துறவாக அறனும் வீடும் பயப்ப ஓர் காப்பியஞ் செய்தமைத்தனனெனக்கேட்டு" என்பதால், சிலப்பதிகாரத்திற்கு முன்னரே மணிமேகலை இயற்றப்பட்டது என அறிகின்ருேம்.

மதுரைச்சாத்தனுர் சரித்திரத்தின்முற்பகுதியாகிய கோவலன் வரலாற்றைக் கூறவிழையாது, தான் கூருதொழியினும் பிறரெவராலும் வரையப்படாதிருக்கும் பொழுது பிற்பகுதியாய "மணிமேகலைதுறவி"யைமட்டும் காப்பியமாக்க எங்ஙனந்துணிந்தார்? பிறரெவராயினும் அதுபொழுதோ அன்றிப் பின்னெருகாலத்தோ இயற்றுவர் எனக் கருதியிருப்பரோ? அடியார்க்கு நல்லா ருரைப்படி யங்ஙனமுந் துணிதற்கில்லை. சாத்தர் 'யாமே யியற்றக் கருதியுள்ளோம்' என உட்பொருள் ஒன்றுந் தோன்றுமாறு கூறியதாக உரையாசிரியர் வரைகின்ருர். முரணின்றி இப்பெருநிகழ்ச்சியை மொழிவதாயின் "கோவலன் வாழ்க்கையைக்" கூறிய பின்னரே "மணிமேகலை துறவி"யை மொழிதல் வேண்டும். இங்ஙனமன்றிப் பிற்பகுதியை முற்கூறிமுற்பகுதியைப் பிற்கூற விழைதல் எங்ஙனம் அமையும்? இனி உரையாசிரியர் உரையை விடுத்து இவ்விரு பெருங் காப்பியங்களின் பதிகங்களைமட்டும் நோக்குமிடத்துச்சாத்தர்அடிகளைக்கேட்கச்சிலப்பதிகாரமும், அடிகள் சாத்தரைக் கேட்க மணிமேகலையும் தோன்றியவெனப் பெறப்படுகின்றது. இனி ஒரு ஐயம்.

செங்குட்டுவனெடு அடிகளும்சாத்தரும் உடனிருப்புழிக் குன்றக்குறவர் திரண்டு போந்து,'அண்ணலே எம்மலைச் சாரலிலே பொலம்பூவேங்கைக் கொழுநிழற் கண்ணே ஒரு முலையிழந்து நின்ருளோர் திருமா பத்தினிபொருட்டு நண்ணிய விண்ணவர்கள் அக்கற்புடையாட்டியின் கண்ணிறை கணவனை யவட்குக் காட்டி விண்ணிடம் போயது ஓர் இறும்பூதாயிரா நின்றது; இதனை யறிந்தருளுக' என்ற பின்னரே அடிகள் காப்பியஞ்செய்யக் கருதுகின்ருர். சாத்தர் இதற்கு முன்னரே 'மணிமேகலை' இயற்றிவிட்டதாக அடியார்க்கு நல்லார் வரைகின்ருர். எங்ஙனம் இயலும்? கோவலன் இறந்த பதினலாம் நாட் பகல் நீங்கிய பின்றை விண்ணவர்வடிவிற் கணவனைக் கண்ட கண்ணகி மண்ணுல கொரீஇ விண்ணுலகுற்ற காட்சியைக் கண்டதும் குறவர்கள் அச்செய்தியை அடிகட்கு அறிவிக்கின்றனர். அக்கணமே அடிகளும் நூலியற்ற விழைகின்ருர். இங்ஙனமாக, மணிமேகலை துறவுபூண்டு தருமங் கேட்டதும், மணிபல்லவம் புக்கதும், மாபெரும் பாத்திரம் பெற்று ஆபுத்திரன்றிற மறிவித்ததும், சமயக் கணக்கர் தந்திறங் கேட்டுப் பவத்திறமறுகென வப்பைந்தொடி நோற்றதும் நிகழ, எத்துணையாண்டுகள் வேண்டும்? ஒருக்கால் இவ்விரெழு நாட்குள் நிகழ்ந்து விட்டனவோ? அன்றி வான்மீகியைப்போல் பின்னிகழ்ச்சியை முன்னரே யறிந்து கூறினரோ?

இவற்றுள் ஒன்றேனும் எளியேற்கு விளங்கிற்றிலது. பெருந்தகையீர்! என தையமகற்றி யருண்மின்.

P. இராமாநுஜன்.

இவரது ஐயங்களுள் புலமைக்கும் பொய்க்கும் உள்ள தொடர்பைப் பற்றியதற்கு அமைதி இன்றைய தலையங்கத்தில் காட்ட முயன்றுளோம். மற்றுச் சிலப்பதிகாரப்பதிகத்தைப்பற்றிய ஐயத்திற்கு அமைதி நமது நண்பர்கள் எவரேனும் வரைந்தனுப்ப விழைகின்ருேம்.

ஆசிரியர்.

குலசேகரர்.

ஊசியின் காதில் ஒட்டை நுழைந்தது.

எனது நூல்

எல்லா நூல்களிலும் கடவுள் நூலே சிறந்ததென்பர். கடவுள்நூல் எனத் தமிழ்நாட்டிலே கருதப்படுவன திருமுறைகளும், நாலாயிரமும், திருக்குறளுமே யாகும். இவையே தமிழரது திருமறை. இவற்றில் திருக்குறளோ எல்லோருக்கும் பொதுவாகிப் பொலிகின்றது. இதனைச் சிறுநூல் என இகழ்வார் இல்லை; ஆதலின் பெருநூல் எனப் புகழ்வாரும் இல்லை; திருநூல் என்றே சிறந்து திகழ்கின்றது. ஒப்பமுடிந்த இடத்தில் ஊக்கமேன்? உள்ளக் கிளர்ச்சி ஏன்? மாருட்டமில்லாதபோது போராட்டமேது? செத்தபாம் படிப்பார் சிலரே அன்றிப் பலர் இல்லையே! "ஆம்" "ஆம்" என்று அனைவரும் ஒன்ருகி உடன்பட்டுச் செல்லும்போது, நமது உள்ளம் தூக்கங்கொண்டு வீழ்ந்துகிடக்கின்றது; கூடையில் பாம்பென ஆடாதடங்கி நிற்கின்றது. யாரேனும் "இல்லை" என்று எதிர்மறுத்தால், "உண்டு" என்று ஊக்கங்கொண்டு விழித்தெழுகின்றது; சினங்கொண்ட பாம்புபோலச் சீறிவிழுகின்றது. இவ்வூக்கப்

பெருக்கம் திருக்குறளிடத்தேதது? 'சிவன் பெரியவன்' என்றால், "திருமால் பெரியவன்" என்று மன்றாட ஆள் உண்டு. ஆதலின் அந்த விழிப்புநிலையைத் திருமுறையினும் நாலாயிரத்திலும் காண்கின்றோம். திருக்குறளோ கடல்போலவும் காற்றுப் போலவும் கருவானம் போலவும் எல்லோர்க்கும் பொதுவாகி நிற்கின்றது. காற்றில்லையானால் கண்ணிமைக்கவும் இயலாது. எனினும், அதுபற்றிக் கைகலந்து போராடுவார் காற்றோட்டமான காட்டிலும் இல்லை. காற்றோட்டமில்லா நாட்டிலும் இல்லை. ஆனால், துரும்பாகிய இரும்பாணியைப்பற்றி என்ன போரிடுகின்றோம். களவாடியவன் கையையும் காலையும் கழுத்தையும் வெட்டுவோம். கையிருப்பெல்லாம் இழந்தும் மன்றாடிக் கடுஞ்சிறையிற் காவல் வைப்போம். ஏன்! அது பொதுஉடைமையாகாது நமதுடைமை யாதலினால் அன்றோ? திருமுறையினையும் நாலாயிரத்தையும் நம்முடைய கைப்பொருள் எனக் கருதிக் களிக்கின்றோம் கடிகின்றோம், கதறுகின்றோம். கடல்போலப் பரந்த கங்கைவெள்ளத்தைக் கட்டியாள நம்மவர் கனவிலும் கருதுவதில்லை. அதனையே செப்புக்குடத்திலும் பித்தளைக் குடத்திலும் முகந்து அடைத்தபோது, அதில் ஒவ்வொரு துளிக்கும் ஒவ்வோர் ஊழி கடுந்தவம் கிடந்து போராடுவோம்; குடமுருளத் தலையுருளக் குருதி வெள்ளம் கூடிப்பெருகும். கடலுக்கும் மேலும் பரந்து, கண்ட இடத்தும் காணா இடத்தும் கலந்தருளிக் கரந்து நின்ற கடவுளைப்பற்றிக் கடும்போர் புரிவார் இல்லை; கோழிச்சண்டையும் போடுவார் இல்லை. ஆனால், அக் கடவுளைக் கல்லிலும் செம்பிலும் முகந்துவைத்தும் கோயிலில் பூட்டித் தாளிட்டுவைத்தும் வழிபடத் தொடங்குகையில், என்கடவுள் "உன் கடவுள்" என்ற பெருவழக்கும் தொடங்குகின்றது. குடத்தின்வடிவே குடத்தில் நீருக்கும் அமைவது போல, எண்ணியவன் எண்ணத்தின் வடிவே இறைவனுக்கும் அமைவதால், எண்ணிறந்த கடவுள்களாக விரிந்த அவ்விடத்தில் எதுதான் இறைவனது இயற்கைவடிவம், என எல்லோரும் தேடப் புகுகின்றனர். தாம்தாம் கண்டதே கடவுள்எனக் கொண்டு வாய்வழக்கோடு நில்லாது போர்முழக்கமும் புரிகின்றனர். சினம் அவிந்த சிவநிலையில் சினம்பொங்கி எழுகின்றது. அங்குத்தான் மக்கள் துடிதுடிக்கின்றனர்; பதைபதைக்கின்றனர். உயிரும் உடலும் உருகிவழியத் தம்மை மறந்து தனியே நிற்கின்றனர். எனவே மக்களுக்கு இவ்வகையில் திருமுறையினிடத்தும் நாலாயிரத்தினிடத்தும் பற்று மிகுதியும் உண்டு என்பதாயிற்று.

வடமொழி மறை

வடமொழி மறையும் கடவுள் நூலே. ஆனால் ஒருவகையில் வட மொழியினும் தமிழ்மறை தமிழ் நாட்டிலே சிறந்து விளங்குகின்றது. தமிழோ இங்குள்ளாரது தாய்மொழி. வடமொழியோ பலர்க்கு ஓசையினளவாய் நிற்பதோர் மொழி. அதன் பொருளறிந்தார் சிலரே. அதனை ஓதி உணர்ந்து உள்ளமுருகி உவகைக்கடலில் திளைப்பார் ஒரு சிலரே. கடவுளைப் பற்றிய நூல்கள் வடமொழியில் இருந்தவரையில் கடவுளைப்பற்றி யறிந்தவர் சிலரே. பௌத்தர்களும் சமணர்களும் இவ்வளவறிந்து தமது நூல்களைத் தமிழில் எழுதத் தொடங்கினர். அவர்கள் கொள்கைகள் எங்கும் பரவுவன ஆயின. இரும்பை இரும்பாலேயே வெட்டுவது போலத் தமிழ்மொழி கொண்டே அந்தக் கொள்கைகளை நம் நாட்டு அடியார்கள் வென்றனர். செவிக்கினிய திருப்பாடல்களைத் தேனும் கைக்கப் பாடித் தெவிட்டாத சிலர் பேரின்பம் தேக்கெறிய நின்றனர். பாட்டே யுருவான பெருமானைப் பாட்டால்பாடித் தாமும் பார்த்தனர். பிறரையும் பார்க்கச் செய்தனர். இந்த வகையில் வடமொழி மறைக்கும் தமிழ்மறைக்கும் உள்ள வேற்றுமையினைச் சுவை ததும்பப் பாட்டாகப் பாடினார் பாடவல்ல சிவப்பிரகாசனார்.

'விளங்(கு) இழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரைஎனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்தது?" என்குவீர் ஆயின்
வேதம் ஓதின் விழிநீர்ப் பெருக்கி
நெஞ்ச(ம்) நெக்(கு) உருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகம் இங்(கு) ஒருகால் ஓதில்
கருங்கல் மனமும் கரைந்(து)உகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே'

[விளங்கும் நகைகளை அணிந்த மலைமகள் பங்கிட்டுக்கொண்ட உடலினை உடையவன்; முக்கண்ணன், அனைத்திற்கும் அடியாகிய காரணன்; அத்தகைய சிவபெருமானே கூறியதாகிய திருமறை உயர்ந்ததா? அந்த ஆதி முதல்வனுடைய சீர்களைப் பாடி வணங்கும் (மாணிக்கவாசகர்) வாதவூரரது மலர்வாயிற் பிறந்த திருவாசகம் என்னும் தேன் உயர்ந்ததா? என்றுகேட்பீர்களானால், நீங்களே கண்ணால் கண்டறியுங்கள். வடமொழி மறையை ஓதினால் கண்களில் நீர் கலங்கி வழிய நெஞ்சம் நெக்கு உருகி நிற்பவரை நாம் காண்கின்றோமா? இல்லையே. ஆனால் திருவாசகத்தை ஒருமுறை ஓதினவுடனே முன்பின் அறியாதவனும் தன்மனம் கருங்கல் மனமாக இருந்தாலு மனநெகிழ்ந்துருகித் தனது கண்களினின்று நீரானது மணற்கிணற்றிலிருந்து சுரக்கும் நீர்போலப் பொங்கி வழிய மயிர்கூச்செறிய விதிர்விதிர்த்து அன்பே உருவாகிவிடுகின்றான். பலவகையான மக்களும் உள்ள இவ்வுலகில் இவ்வாறு ஆகாதவர் யாரேனும் உளரோ? இல்லையே. கண்கூடாகவே திருவாசகத்தின் உயர்வினை நாம் காணவில்லையா] என்கின்றார். திருவாசகத்தைப் புகழ்ந்தது திருமுறையையும் நாலாயிரத்தையும் புகழ்ந்ததேயாம். அன்றியும் வடமொழி மறையினை நாற்பாற்குடியில் மேற்பாற் குடியினரே ஓதிவந்தனர். பொழுது இல்லாமையால் மற்றையோர் ஓத இயலாமற்போயிற்று. சிலநாள் செல்ல அதுவே வழக்கமும் ஆயிற்று. ஆனதும், சிலரே ஓதலாம், பலரும் ஓதலாகாதென ஓர் கட்டுக்கதை கட்டிவிட்டனர். அஃதும் தமிழ் மறைக்கு நல்லதாயிற்று. பொருளறியாது சிலசொல்வதைவிட்டுத் தமிழில் பொருளறிந்தோதிப் புத்துயிர் பெற்றுப் புதுநூல் பலவும் எழுதிப் பலரும் உதவினர். வடமொழி நான்மறையைக் கீழ்ப்பாற் குடியினர் கேட்கலாகாது; கற்றலாகாது. தமிழ் மறையினையோ எல்லோரும் எளிதில் கருத்தாரக் கற்கலாம் காதாரக் கேட்கலாம், வாயார ஓதலாம். இது தமிழ்க்கோர் உயர்வென்றார் அவ்வுயர்வையும் உணர்ந்த சிவப்பிரகாசனார். மட் கலத்தைக் கீழானோர் தொட்டால் அஃது இழிவடைகின்றது. பொற்கலத்தைக் கீழானோர் தொட்டாலும் இழிவடையாது உயர்ந்தே விளங்குகின்றது. மட்கலம் போன்றது வடமொழி நான்மறை; பொற்கலம் போன்றது தமிழ்மறை. அம்மட்டோ; நான்மறை ஓதினால் அறத்தால்வரும் பயன் பெறலாம். தமிழ்மறை ஓதினால் வீடே பெறலாம்.

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நீழல்வாய் உண்ட நிகரில் ஆனந்தத்
தேன்தேக்கு எறியும் செய்ய மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத் (து) ஆதலின்
பொற்கலம் நிகர்க்கும். மதுர வாசகம்
ஓதின் முத்தி உறுபயன்.
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே.

இறைவனுக்கும் தமிழினிடத்தேதான் இணையிலாத பேரன்புண்டென்றனர் தமிழ்ப்பாவாணர்கள். வானல்ல, மண்ணல்ல; நீரல்ல; தீயல்ல வளியல்ல; ஒளியல்ல; இருளல்லஉருவல்ல ஏதும்அல்ல, என் றுஇறைவனைத் தேடிபோய்க் காணாது நான்மறையும் அயர்வெய்தினவாம். ஆனால் அவ்விறைவனே அன்பெனும் பிடியுள் அகப்படு மலையாகி அன்பர் பாடிய பாடலைத்தேடி அத்திருப்பாடலைப் பாடுவார் பின்னே ஓடுவானாம். திருமால் உலாப்போம்போது தமிழ் மறையை முன்னோதுவதும், நான்மறையைப் பின்னோதுவதும் இதனையே வற்புறுத்துகின்றனவாம்.

வேதத்தின் முன்செல்லும் மெய்யுணர்ந்
தோர்விரிஞ் சன்முதலோர்
கோதற்ற ஞானக் கொழுந்தின்முன்
செல்லும்; குணம் கடந்த
போதக் கடல் எங்கள் தென்குரு
கூர்ப்புனி தன்கவியோர்
பாதத்தின் பின்செல்லுமே தொல்லை
மூலப் பரஞ்சுடரே

[தொன்றுதொட்டு எல்லாவற்றிற்கும் அடிப்படையான உயர்ந்ததோர் அறிவு விளக்கானது, நான்மறைக்கும் அகப்படாது முன் செல்லும்; உண்மைபுணர்ந்த மறையவன் முதலான குற்றமிலாத பேரறிஞரது அறிவுக்கும் எட்டாது அதனையும் கடந்து முன்செல்லும்; உலகக்கலப்பு இல்லாத அறிவே கடலாய்க் குருகூரில் பிறந்த நம்மாழ்வாரது பாட்டின் ஓரடிக்குள் ஆழ்ந்து குளிக்கவேண்டி அதனைத்தேடி அதன் பின்னே செல்லும்] என்று கல்வியிற் பெரிய கம்பரே கூறுதல் காண்க. திருவாய் மொழிக்குச் சொல்லிய இச்சிறப்புத் தமிழ்த்திருமறை அனைத்திற்கும் பொருந்தும்.

சீர்திருத்தம்

189042

Man, The Reformer by Emerson

உலகசரிதையில், சீர்திருத்த முயற்சிக்கு இந்நாள் போல், எப்பொழுதும் இடமிருந்ததில்லை. மார்ட்டின் லூதரும், அவரைச் சேர்ந்தாரும், கிறிஸ்தவப் பாதிரிமார்களும் மற்றவரும், தங்களது சீர்திருத்த ஊக்கத்தில் கண்டித்தவை பலவாயினும், மதம், இலக்கியம், மாந்தரின் பழங்கவழக்கம், அரசாங்கம் ஆய பலவற்றில் ஏதாவதொன்றை ஏற்கவே செய்தனர். அன்னவர் ஏற்றுப் போற்றியதும், தூற்றித் தள்ளியதும் ஆனவைகளைப்பற்றிய தீர்ப்பின்முடிவை ஏற்கும் காலமோ வந்துளது எனக் கூவும் முரசொலி கேட்கின்றது. காலந்தாழாது முடிவேற்கப் போகத்தான் வேண்டும்.

'சீர்திருத்துமாறு முன்வந்து முயல்பவர்கள் காலவியலோடமைபாவகைக் கண்துறந்து கிட்டுதற்கியலாவொன்றிற் பிடிவைத்துப் பேசுகின்றனர்' என்று சிலர் கூறலாம். காரணமென்ன? மாந்தரும் சமுகமும் கீழ்நோக்கித் தாழ்வதைக் காணச்சகியா மனம் சமுகம் விழுந்துள்ள வீழ்ச்சிக்கு எதிர்முகமாய் வெகுதூரம்முன்னே சென்றுவிடுகின்றது. மனிதனும் அவனது செயல்களும் பொய்மையின் சிறுமையால் தனது நிசத் தத்துவத்தை யிழந்து நிலைகுலைந்து நிற்குங்காலைப் புலவன், நடைமுறை உலகினின் றகன்று கருத்துலகிற் படிந்து, வாழ்க்கைக்கும் இயற்கைக்கும் புதியவோருயிர் தேடுகின்றான். சமுகத்தில் மறுபடியும் கருத்தினைதரசே செலுத்தட்டும். மாந்தரின் வாழ்க்கை கலைதழுவித் தூய்மைவழி நிற்கட்டும். எனின், புலவன் ஓடமாட்டான்; நின்னிடை என்னிடை இருந்து, அன்புடனே பிறர் மகிழத் தான்மகிழ்ந்து வாழ்ந்திருப்பான்.

'ஐய, இச்சாதியின் அமைப்பு நேற்று ஏற்பட்டதன்று! ஒழுக்க முறைகளும் விதிகளும், சொத்தும் அதற்கான உரிமைகளும், பலநூற்றாண்டுகளாக இருந்துவரும் சட்டதிட்டங்களும், பழையதொரு அஸ்திவாரத்தில் எழுந்துளது' என்று சொல்லுவதால் உதித்தவொரு புதுக்கருத்துச் சமுகத்திற் புகாமல் தடுக்க முடியாது. திருத்தக் கருத்தெனும் பேய் நுழைய ஒவ்வொருமனிதன் உள்ளத்திலும் ஓர் இரகசியக் கதவுளது. உன்உள்ளத்தில் மலர்ந்தவொரு கருத்தும், நம்பிக்கையும், உன்னிடந்தான் பிறந்துளது என்று, நினையாதே. உன்பால் எத்தருணம் எழுந்ததோ அதே கணத்தில் ஆயிரக்கணக்கானவர் மனதிலும் அவ்வாறேஎழுந்துளது. நீ மகிழ்வுடன் மறைத்துவைக்கும் இரகசியமொன்றே, நீ வெளியே செல்லுங்கால், புறவாயில் நின்றொருவன் அதை உனக்குச் சொல்வதைக் கேட்கத் திகைப்பெய்துவாய். பணம் சேர்க்கும் இளகாக் கல்மனத்தான், அவனுள்ளம் புகுந்தவொரு புதுக்கருத்தால்எழுந்த சந்தேகங்களைநினைக்குங்கால், கலங்கி நடுங்காது போகான். கால்தடுமாறாது நிற்கப் பூமியும் பிடியுமுண்டு, என்றும், அவன் அஞ்சாதுநிற்பான் என்றும், நாம்நினைத்திருந்தோம். ஆனால் நிலையற்று ஓட்டம் பிடிக்கின்றான். இதைக்கண்ட புலவன் கூறுவான்:

'என்னிடம் உதித்த எண்ணத்தைக் கேட்க நகைப்பீர்கள் எனக்கொண்டு சொல்லப் பயந்தேன். ஆனால் பாருங்கள், மாந்தரின்பிரதிநிதியும் வியாபாரியும்எனது எண்ணத்தையே சொல்லிப் போகின்றனர். நான் இனியும் ஒருநாள் நினைத்ததைச் சொல்லத் தாழ்ந்திருப்பேனாயின், நான் சரியானகாலத்தில் கூறத் தவறியவனாவேன். எங்கும்யாவரும் நான்நினைத்ததை, நினைப்பதும் சொல்லத் தயங்குவதும், ஐயுறுவதும், பின்னர்ச் சோதிடம் கூறுவதுமாய் இருக்கின்றனர், அல்லரோ!'

வாழ்க்கைநலமுடைய இளைஞர் பாதையில் மலையெனத் தடைபலவழிமறுத்து நிற்பதைக் கருதும்போது,சமுகப்போக்கினை ஆயப்புகு மெண்ணம் எழுவது ஆச்சரியப்படத் தக்கதன்று. சிறுவனொருவன் வாழ்க்கையில் புகுகையில், வருவாய் மிகத்தரும் பாதையில் தீமைகள்நிறைந்திருப்பதைக்காண்கின்றான். கொள்ளையோடு உறவாடும் சுயநயமும், மோசத்தோடு உறவாடிச் சமயத்திற் கேற்றவாறு விவகரிக்கும் சூழ்ச்சியும் வியாபாரத்தை இருகப் பற்றிநிற்கின்றன. வியாபாரம் மனிதனுக்கு ஏற்ற நன்றென்றும் வளர்ச்சிக்குரிய தன்றென்றும் நான் முழுதுட் கூறவரவில்லை. ஆனல் இந்நாள் வியாபாரம் போகும்வழியை நோக்குங்கால் பொய்யும் வஞ்சனையுமா யிருக்கின்றது. வாழ்க்கையில் புகுந்துள்ளசிறுவர், வியாபாரத்தில் மறைந்திருக்கும் படுகுழியில் வீழாதிருக்கப் போதிய பயிற்சியும் அதனல்ஏற்படும் வன்மையும் பெற்றிலர். ஆகவே புகுந்தவர் வீழ்ந்தே விடுகின்றனர். பிறகு வேறுவழியில்லை. மென்மனமும், நற்குணமு முள்ளவனுக்கோ ஆதலாற்ருன், வியாபாரம் ஏற்றதன்றெனக் கூறுகின்றேன். இத்துறையில் அவன் வெற்றியுடனிருக்கவேண்டுமெனின் அவன் இளவயதில் கண்ட காட்சியெல்லாம் கனவேயாய் அழியவேண்டியதுதான். சுவையிலா வியாபார உத்தியோகத் தினசரி என்னும் கயிற்ருல் கண்டுண்டு கிடக்கவேண்டியதுதான். இல்லையேல் அவனுக்குப் பிழைக்க வேறுவழி யில்லாது, வருடா வருடம் வயிற்றிற்கென உழுது பயிரிட்டு வாழ்பவன் போல் புதியதாய் வாழ்க்கையைத் துவக்கவேண்டியது தான். வியாபாரத் துறைபடிந்தோர் ஒருபுறமிருக்க, மற்றவர் நிலையென்ன? சாமான்களும் உணவுப்பொருகளும்பயிராகு மிடத்திலிருந்து கடைகளுக்கும் நமது வீடுகளுக்கும் வரும்முறையைத் துருவி ஆராய்வோமாயின், நாள்தோறும் உண்ணும் உணவிலும், குடிக்கும் பானத்திலும்,உடுக்கும் உடையிலும்,மோசமும் பொய்யும் கலப்பதை அறியலாவோம்; ஆகவே வியாபாரிகளேபோல் நாமும் குற்றவாளிகளே. நமது வாழ்க்கைக்குரிய பல சாமான்கள் வெஸ்டு இண்டீஸ் என்னும் தீவினின்று வருகின்றதல்லவா? ஸ்பெயின் தேசத்தாருக்குச் சொந்தமான தீவுகளிலிருந்து,நமது கப்பலில் ஏற்றப்படும் சாமான்கள், பணத்தையே கும்பிட்டு வாழும் சிறுமை வாய்ந்த உத்தியோகஸ்தர்களால்,லஞ்சம் பெற்று மலிவானதாகச்செய்யப்படுகின்றனவென்பது யாவருமறிந்ததொன்ருகும். ஸ்பெயின் தீவுகளில் இருக்கும் நம்நாட்டுக் கான்ஸல் உத்தியோகஸ்தனுயில்லாத நமதுவியாபாரப் பிரதிநிதிகள் அனைவோரும், தாங்கள் ரோமன்காதலிக்கு மதக்கொள்கையர் என்று சத்தியம் செய்துவிடுகின்ருர்கள். எதற்காக? எல்லாம் இலாபத்தின் பொருட்டு. நீக்ரோ அடிமைகள் நமக்குச் செய்துளது சிறியதன்று. நமக்கெனப் பாடுபடும் அவர்கள்மாட்டு நாம் எவ்வளவு கடமைப் பட்டுளோம் என்பதை அடிமைத்தனமொழிக்கும் வேலையிற் புகுந்தார் காட்டித்தந்துள்ளார்கள். குபா என்னும் தீவினில் அடிமைக்கூலிகள் ஒருபுறமிருக்க, வருடாவருடம் புருடர்கள் மாத்திரம் பல வூர்களினின்று தோட்டக் கூலிகளாய்க் கொண்டு வரப்படுகின்றர். வருபவன் வாழ்க்கையின் சுகம் எதுவும் காணுது மாடென உழைத்து நாயெனச் சாகின்ருன். எதற்காக ஐய! நமக்குச் சர்க்கரைசெய்ய. துறைமுகத்து நடவடிக்கைகளையும் கப்பல்வேலை செய்பவர்கள் படும் கஷ்டங்களையும், நமது வியாபாரக் கொள்கைகளையும் விரிக்க நான் விரும்பவில்லை. புத்திசாலிகள் தாங்களே தெரிந்துகொள்ளக்கூடும். ஆகவே நமது வர்த்தகமுறை சுயநயத்தை அடிப்படையாகக் கொண்டது. கருணையும், ஒருவருக்கொருவர் துணையாய் அமைவதும், அன்பும் வீரமும் அதில் இல்லவேயில்லை. பிறரிடம்சந்தேகம்,தான்பெற்றதைப் பிறர் அறியாவண்ணம் ஒளித்தல், பிறருக்கு முன் சென்று-கோடுப்பதற்கன்று-அவர்க்கிலாது நாமொன்றைப் பெறுதல் என்னும் தத்துவத்தில் உழல்வது நமது வியாபாரம்.

உயரியநண்பன் ஒருவனுக்கு உள்ளத்துறைஉவகையோடு உரைக்கக்கூடியகாரியம் ஒன்றன்று நம் வியாபாரம்; தனிமையில் அன்பின்வயமாகும் வேளையினில் மனம் மேல்நோக்கிச்செல்லும் நிலையினில், இது சரியென்று மகிழ்ச்சியுடன் சிந்திக்கத் தக்கதுமன்று அது. ஆனல் முடிவின் பகட்டைமாத்திரம் வெளியிற் காட்டி மற்றதைப் பிறர்அறியாவண்ணம்மறைப்பதும், சேமித்த முறையிலுள்ளகுறைகளை செலவுசெய்யும் வகைகளால் நீர்க்கமுயல்வதுமாகும் அது. வியாபாரப் பாபங்களை நான்ஒருவன்மீதோ,அல்லது ஒருதனிவகுப்பினர் மீதோ சுமத்துவதாகக் கருதவேண்டா. பயிர் செய்பவன் ஒருவன், கொண்டுவந்து விற்பவன் ஒருவன, தின்பவன் ஒருவன்; எல்லோருக்கும் இப்பாபத்தில் பங்குண்டு. ஆனல் எவனும், தானும் ஒரு பங்கைப்பகிர்ந்துகொள்ளுவதாக நினைப்பதில்லை.வியாபாரத்தில் உள்ள தீமைகளுக்கு நான் கர்த்தாவல்லன், ஆகலால் நான் அதை மாற்றுதல் இயலாதென்பான். அவன் யாவன்? தனது உணவைப் பெறவேண்டிய சாதாரண மனிதன். கெடுதல்முழுதும் இந்த வாசகத்திற்ருன் இருக்கின்றது. தான் மனிதனென மனிதனுக்காக வினைசெய்ய வேண்டுமெனும் உணர்வுஎவனிடத்தும் ஏற்படுவதில்லை. மனிதனது பின்னமாய் (Fraction of a man) அமைகின்ருன். பெருநோக்குடைய பெரியோர், மனிதனென வினைபுரிய வேண்டுமென்னும் உணர்வுதூண்ட, வர்த்தகமும் வியாபாரமும் தங்களுக்கு ஏற்ற தன்றெனக் கண்டு வெளியேறிவிடுகின்றனர். வருடா வருடம் பெருகிவருகின்றது இத்தகையார் தொகை.

(தொடரும்)

இதுவரையில் இவ்வருடச் சந்தாவை அனுப்பாதவர்களுக்கு இன்றுமுதல் வி. பி. அனுப்பிக்கொண்டு வருகின்ருேம். தயவுசெய்து தாமதமின்றிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்ருேம்.

மானேஜர்.

பதினெட்டாம் பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும், எழுதவும் ஆரம்பித்துவிடலாம். இந்தப்பாஷையில் வியாபாரரகசியங்களைக் குறித்துக்கொண்டால் பிறர் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் கணவர்களுடன் குடும்ப ரகசியத்தைப் பேசினல் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக்கேட்டுப் பிறரிடம் சொல்லிக் கோள்மூட்ட முடியாது இது ஓர் அபூர்வ தமிழ்ப்பாஷை சொல்பகாபிகளே இருக்கின்றன. மூந்துங்கள். விலை அணு 8.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரைத் தமிழில் வெளிவந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றிச் சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாஸங்களைப் பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்தபின் பிறர் சிபார்சு இல்லாமல் நீங்களே வாங்குவீர்களென்பது நிச்சயம். பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூபா 1—4—0. மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] ஆங்கில ஆசான் [வந்துவிட்டது

[எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.]

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியவிதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.

கம்பராமாயணம், பாலகாண்டம்.

புதியதோர் வகையினதான ஸ்ரீமான் T. N. சேஷாசலமையர் பதிப்பு. செய்யுள்களுக்குப் பதவுரை கூருது, பதம் பிரித்தும் தொகை விரித்தும், அன்வயப்படுத்தியும் படிப்பவர் தாமே முயன்று பொருள் தேடுமாறு ஆக்கப்பட்டுளது. கடினமான பதங்களுக்கு உரை சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூ. 3-0-0. தபால் செலவு வேறு.

ஏமாங்கதத்திளவரசன்.

T. N. சேஷாசலம் ஐயர் இயற்றிய நூல். இலக்கிய நலங்கள் யாவும் துலங்குமோர் காதற்கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்து செய்யும் துன்மதிச் சூழ்ச்சியும், வீரனொருவன் மண்மோகமும், இக்கதையை நிகழ்த்திவைக்கும் பெருமையைப் படிப்பவரே அறிவர். விலை ரூ. 1-0-0.

தபால் செலவு வேறு.

கந்தபுராண வெண்பா.

வெண்பாப் புலி என்ற புகழ்தாங்கிய ஸ்ரீ தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றியநூல் இது. 6-காண்டங்களும், 5665 செய்யுள்களும் கொண்டது. ஓதுதற்கினிய நேரிசை வெண்பாக்களால் ஆயது. கற்ருேர் இதயம் களிக்கச் செய்யவல்லது. விலை ரூ. 4-8-0.

தபால் செலவு வேறு.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கட்டரமணி M.A.,B.L. ஆங்கிலத்தில் செய்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பாசிரியர். இக்கதையின் அமைப்பும், சொல்லும் வகையும், எளிய நடையும், படிப்பவர்க்குக் களிப்பைத் தரவல்லன. விலை ரூ. 1—8—0.

தபால் செலவு வேறு.

கலா நிலயம், வெள்ளாளர் தெரு, புரசைபாக்கம்; சென்னை.

Our Publications.

Kamban's Kosala.

By T. N. Seshachalam, A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville** and **Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book. Price Rs. 1-8-0.

மேனட்டுப்பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின் டால்ஸ்டாய், இவர் தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்

கம்பன், காளிதாசன், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங்கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதியசம். விலை அணு 4.

விசித்திர விளக்கு

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

The Educational Publishing Co., *Nungambakam, Madras.*

இந்தியாவிலும் பர்மாவிலும்

எங்கள்

தங்கக்கலன்களும் வெள்ளிக்கலன்களும்

உபயோகத்தோடு சுத்தமும் அழகும் சேர்ந்திருக்குந் தரத்தினை அனைவரும் அறிவர்.

சுத்தம்

சுத்த வெள்ளியும் சவரன் பொன்னுமே உபயோகப் படுத்துகின்றோம். உலோகத்தின் சுத்தத்திற்கு அடையாளமாக நாங்கள் செய்த சாமான்களின்மேல் டையமண்ட் டிரேட் மார்க் காணப்படும்.

அழகு

எமது மாதிரிகள் புதியன. கண்ணைக் கவரும் அழகுடையன. எங்களுக்கே பிரத்தியேகமான இவை, நவத்திலும் நவமான நாகரிகமுடைய வெள்ளி வேலைகளின் அழகையும் பெருமையையும் அமையப் பெற்றிருக்கின்றன.

உபயோகம்

சுத்த வெள்ளிச் சாமான்களையே வாங்குவதன் இலாபம் எவருக்கும் தெரியும். வாங்கும் விலையையும், எத்தனைவருஷம் அந்தச்சாமானின் அழகு அழியாம லிருக்குமென்பதையும் வகுத்துப் பார்த்தால், "சிறந்த சாமான்களே மலிந்த சாமான்களுமாகும்'' என்னும் பழமொழி பழுதாகாததை யறிவீர்.

குடும்பத்து வெள்ளிச் சாமான்கள் யாவராலும் மனங்கனிந்து பாராட்டப்படுவன. அவைகளைக் காணுந்தோறும் முன்னை நினைவுகள் பல ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்வது இயற்கையே. தலைமுறை தலைமுறையாய் இவைகளையும் இவைகளை வாங்கிவைத்த உங்களையும் கொண்டாடுவார்.

வாங்கி நீங்கள் வைத்து மகிழ்வதற்கும் நன்கொடை அளித்து மகிழ்விப்பதற்கும் உரிய எங்கள் வெள்ளிக்கலன்களை மனமுவந்து காட்டுகின்றோம், வாருங்கள்.

வெகுமதியளிக்க

வெள்ளிக் கலன்கள் உபயோகத்தாலும் அழகாலும் தனக்குச் சமானமில்லாத் தனிப்பெருஞ் சிறப்பாலும் அழியாத் தன்மையாலும் மிகப் பொருத்தமானவை.

கப் காஸ்கெட் தட்டு, அல்லது ஸெட்டாகச் சேர்ந்த சாமான்கள் எங்களிடத்தில் தயாராக இருக்கின்றன. இவைகளிலிருந்து வாங்கிக்கொண்டாலும் சரி, இஷ்டமான மாதிரிப்படி எங்களிடம் செய்வித்துக்கொண்டாலும் சரி-பெற்றுக்கொள்பவர் தம்பொருட்டுக் கவனம் செலுத்தித் தேர்ந்தெடுத்திருக்கின்றீர்கள் என்று உங்களை மிகவும் பாராட்டுவர்.

அளவற்ற சாமான்கள் எங்களிடத்தில் செய்து தயாராயிருக்கின்றபடியால் நீங்கள் வேண்டியதைத் தேர்ந்துகொள்வது வெகு சுலபம். நாங்களும் உங்கள் தேவைக்குத்தக்கபடி எடுத்துத் தருவோம்.

எங்கள் கொள்கை

யோக்கியமாகவும் கவுரவமாகவும் நாங்கள் சரிவரச்செய்து விர்த்தி யடைகின்ற வைர வியாபாரத்தைப்போலவே இந்த வெள்ளிச் சாமான் டிபார்ட் மெண்டையும் நடத்தி வருகின்றோம். ஒருமுறை எங்களிடம் வெள்ளி பொன் கலன்கள் வாங்குபவர் பொருள்களின் தூய்மையையும் அழகையும் கண்டு பின் எங்களிடமே செல்வர்.

எங்கள் எஸ்டிமேட்

எந்தச் சாமான் எந்த மாதிரியில் வேண்டுமானாலும் கேளுங்கள். டிஸைன்களும் எஸ்டிமேட்டும் அனுப்புவோம்.

உங்கள் ஆதரவை வேண்டுகின்ற

ஸூராஜ்மல் லல்லுபாய் & கோ.,

135, பெரிய பஜார், திரிச்சிராப்பள்ளி. — வைர வியாபாரிகள், நகைகட்டுவோர் பொன்வெள்ளிக் கலன்கள் செய்பவர். — **313,** எஸ்பளனேட், சென்னை.

SURAJMAL LALLUBHAI & CO.,
DIAMOND MERCHANTS AND JEWELLERS,
GOLD AND SILVER SMITHS.

135, Big Bazaar, TRICHY. — 313, Esplanade, MADRAS.

வர்த்தமானம்.

சைமன் கமிஷன் வருகை:—பர்மாவில் இது பொழுது விசாரணை நடத்திவரும் சைமன் கமிஷனர்கள் இம்மாதம் 18ந்தேதியன்று சென்னைவருவர் என்று தெரிகின்றது.

***

ஸ்ரீபுலுசு சாம்பமூர்த்தி:—காங்கிரஸ் தொண்டரான ஸ்ரீ புலுசுசாம்பமூர்த்தி அவர்கள் இராஜத்துவேஷமுண்டாக்கக் கூடியவகையில் சென்ற சில மாதங்களாகப்பேசி வந்துளார் என்று சென்ற வாரம் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் சிறை சென்றதைப்பாராட்டிப் பொதுக்கூட்டங்கள் பல நடந்தன.

***

இங்கிலாந்தில் எலக்ஷன்:-இங்கிலாந்து பார்லிமண்டில் ஏற்பட்ட காலிஸ்தானத்திற்கு மிஸ்டர் T. பென்னட்டு என்னும் தொழில் கட்சியினரும், மிஸ்டர் H. ஸெல்விர் என்னும் கன்ஸர்வெட்டிவ் கட்சியினரும் அபேக்ஷகராய் நின்றனர். ஓட்டு எடுத்ததில் தொழில் கட்சியினருக்கு 11789 ஓட்டும், லிபரல் கட்சியினருக்கு 11213 ஓட்டும், கன்ஸர்வெட்டிவ் கட்சியினருக்கு 2853 ஓட்டும் கிடைக்கத் தொழிற் கட்சியினர் வெற்றி பெற்றார்.

***

சைமன் கமிஷனுக்கு உபசாரம்:—சென்னைக்கார்ப்பொரேஷன் அங்கத்தினரில் சிலர் தூண்டுதலின் பேரில் கூடிய அவசரக்கூட்டமொன்றில் சைமன் கமிஷனுக்கு உபசாரப்பத்திரம் ஒன்றுவாசித்துக்கொடுக்கவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. சுயராஜ்யக்கட்சியினர் எதிர்த்தனர், என்றாலும் அதிக மானவர்கள் தீர்மானத்தின் சார்பாக வாக்குக்கொடுக்கவே தீர்மானம் நிறைவேறியது. இப்பத்திரம் சென்னைத் துறைமுகத்தில் படித்துக் கொடுக்கப்படுமென்று தெரிகின்றது.

***

சென்னையில் பொதுக்கூட்டம்:—சென்ற வாரம் கோக்கலே மண்டபத்தில் சைமன் கமிஷன் பகிஷ்கார விஷயமாக, திவான்பகதூர் ஆரோக்கியஸாமி முதலியார்தலைமையில் ஒருகூட்டம்கூடிற்று. ஸ்ரீமான் அரங்கநாதமுதலியார், ஸ்ரீசீனுவாஸஐயங்கார், ஸ்ரீபிரகாசம், ஸ்ரீகுழந்தைஸ்ரீசத்தியமூர்த்திஐயர்முதலாயினோர்கூட்டத்தில் பகிஷ்காரத்தின் அவசியத்தைப்பற்றிப் பேசினர். சைமன் சென்னைவரும் நாள் எல்லோரும் கருப்புக்கொடியுடன் ஊர்வலமாய்ச்செல்வர் என்றும், போக்குவரவு சாதனங்களைநிர்ப்பந்தமாய் நிறுத்துமாறு செய்யப்போவதில்லை என்றும் சென்னைத் தலைவர் ஸ்ரீமான் சீனுவாஸ ஐயங்கார் கூறினார். கூட்டத்தில் பகிஷ்கார தினத்தன்று எல்லோரும் பலத்காரமிலாது காரியங்களைச்செய்யவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது.

***

மாணவர் வேலைநிறுத்த முடிவு:—குஜராத்துக் கல்லூரி மாணவர்கள் சைமன் கமிஷன் பகிஷ்கார இயக்கத்தில் கலந்துகொண்டதைக் கல்லூரி அதிகாரிகள் கடியவே, அவர்கள் கல்லூரிக்குச் செல்லாதிருந்தனர். காந்தி அடிகள் முதலிய தலைவர்கள் மாணவர்கள் சுயமரியாதைச் செயலை ஆதரிக்க அவர்களும் 1 மாதம் 7 நாள் பிடிவாதமாயிருந்தனர். இம்மாதம் 8-ந்தேதியன்று கல்லூரித்தலைவர், மாணவர்கள்மீது தமக்கு வருத்தம் ஒன்றும் இல்லையென்றும், அவர்களது பள்ளிக்கு ஆஜராக வேண்டிய நாட்களைப் பிடிப்பதில்லை என்றும்எந்தவிதமான நிபந்தனையுமில்லாது அவர்களை சேர்த்துக் கொள்வதாகவும் கூறி ஒரு அறிக்கையை வெளியிட்டார். வேலைநிறுத்தக் கமிட்டியார் இதை ஏற்று மாணவர்களைக் கல்லூரியில் சேருமாறு கூறினர். மாணவர் 11-ந்தேதி திங்கட்கிழமை கல்லூரிக்குச் சென்றனர்.

மத்திய மாகாணத்தின் அரசியல் நிலை:—மந்திரிமார்கள் சமீபகாலத்தில் தங்கள்பதவியை ராஜிநாமாச்செய்ய, அவர்கள் வசமிருந்த இலாக்காக்களைக்கவர்னர் எடுத்துக்கொண்டார். அந்த இலாக்காக்கள் நிர்வாக சபைஅங்கத்தினர்களினிடம் பிரித்துக்கொடுக்கப்பட்டுள்ளதென்றும், மார்ச்சுமாதம் 31ந் தேதி முடிய அவை நிர்வாக அங்கத்தினர்களின் மேற்பார்வையில் இருக்குமென்றும் தெரிகின்றது. அடுத்த சட்டசபைக் கூட்டம் ஏப்பிரலில் கூடுங்காலை மந்திரிசபையை மீண்டும் ஏற்படுத்தக் கூடும் என்று அரசாங்கத்தார் கருதுகின்றனராம்.

***

ஆப்கன் புரட்சிநிலை:-ஆப்கனிஸ்தானத்துப்புரட்சி நிலையில் மாறுதல் ஒன்றும்ஏற்படவில்லை. பழைய அமீர் காந்தகாரில் இருந்துவருகின்றனர் என்பதைத்தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை. அலிஅகமத்ஜான் என்பவர் ஜலலபாத் என்னுமிடத்தில் யுத்தமுயற்சிசெய்து வருகிறார் என்றும், ஆப்கனிஸ்தானத்து அரசாட்சி மீது மனம்வைத்துள்ளார் என்றும் தெரிகின்றது. கோஹித்மான் என்னும் பிரதேசத்திலுள்ளவர்கள் புதியஅமீர்பாச்சாசாக்கோவிற்குவிரோதமாய்க்கிளர்ச்சிசெய்துவருகின்றனர் என்று தெரிகின்றது. காபூலில் பஞ்சமும் கொள்ளையும் அதிகரித்துளதாம். உணவுப்பொருள்களின் விலைமிகுதியாய்ஏறியுள்ளது. இப்புரட்சியில் சாதாரண ஜனங்களுக்குக் கஷ்டம் அதிகரித்துள்ளதெனத் தெரியலாகின்றது. காபூலில் இருந்த ருஷ்யர்கள் கஷ்டப்படுத்தப்பட்டனர் என்றும் அதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்வதுமன்றி நஷ்டஈடு தரவேண்டுமென்றும் சோவியத்து அரசாங்கத்தார் புதிய அமீருக்கு அறிவித்துள்ளனர் என்றும் ஒருவதந்தி ஏற்பட்டுள்ளது.

***

பம்பாய்க்கலகம்:— சென்றவாரத் துவக்கத்தில் குழந்தைகளைப் பட்டாணியர்கள் பிடித்துக்கொண்டு போகின்றனர் என்றவதந்திகாரணமாக ஏற்பட்ட கலகம்நாளுக்குநாள்வலுக்க இப்பொழுது இந்துமுகமதியச் சண்டையாக மாறியுள்ளதெனத் தெரிகின்றது. அதிகாரிகள் போதியவாறு பந்தோபஸ்து செய்தும் பல விடங்களில் சண்டையும் கொலையும் நடந்தே வந்தது. துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய அவசியமும்பலமுறைஏற்பட்டது. இருதிறத்தினரும்கொலையுண் டிருக்கின்றனர். அதிகாரிகள் 4 அல்லது 5 பேராய்க் கூடலாகாதென்றும், ஆயுதங்கள் தாங்கிச் செல்லலாகாதென்றும் விதித்திருக்கின்றனர். எனினும் கலகமும் கொலையும் ஒய்ந்தபாடில்லை. துருப்புக்களும் கலகம் நடந்த விடங்களில் காவல்செய்து வருகின்றவாம். 10ந்தேதி 200 முகமதியர்கள் ஆயுதங்களுடன் ஒரு டிராம் வண்டியைத்தாங்கி, அதிலிருந்த கிறிஸ்தவர்களையும், பார்ஸி வகுப்பினரையும் விட்டுவிட்டு இந்துக்களைத்தாக்கினர் என்றும் இத்தகைய கோரமான நிகழ்ச்சி இதுவரை நடந்ததில்லையென்றும் ஒரு செய்தி கூறுகின்றது. கல்பதேவிச்சாலையில் நடந்தகலகத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததென்றும் அதில் நால்வர் இறந்தனரென்றும் தெரிகிறது. போலிசார் 200பேர்களைக்கைதுசெய்துள்ளனராம். வயித்தியசாலையில் இடவசதியில்லை என்றும் தெரிகிறது. முகமதியர் அதிகமா யிருக்குமிடங்களில் வசிக்கும் இந்துக்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிகின்றது. கிர்காமிலும் இந்துமுகமதியச் சச்சரவு குறிகள் ஏற்பட்டுள்ளதாம்.

பம்பாய்க்கவர்னர் சமாதான முண்டாக்க முயன்று வருகின்றார். இரவில் எவரும் 8-மணிக்குமேல் வெளியில்போதல் கூடாதென்றும், கள்ளுக்கடைகளை மூடிவிட வேண்டுமென்றும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம். பம்பாய் மார்க்கெட்டுகளும் கடைகளும் மூடப்பட்டுள்ளதாம்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

கலா நிலயம்

1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும்
பைண்ட் செய்தும் செய்யாமலும்
எங்களிடம் கிடைக்கும்.

அதனிலடங்கிய முக்கியமாயகட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும்திருக்கண்ணப்பரும், கம்பராமாயணம். தமிழ்ப்பாடம், அகப்பொருள் வரலாறு, காந்திமதியென்னும் செந்தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், இவைதவிர கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழிபெயர்ப்பு. இன்னும்பல விஷய விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ உள்பட:—

பைண்ட் செய்யாதது
உள்நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளிநாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்ட் பைண்ட்,
உள்நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளிநாட்டிற்கு ரூ. 12-8-0.

புல் காலிகோ கில்ட் பைண்ட்,
உள்நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளிநாட்டிற்கு ரூ. 12-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப்பிக் கேட்கவும்,

மானேஜர்,
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள் ! வியாஸங்கள்! !

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆருதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனாம்.

இன்றே எழுதுங்கள் !

நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

189042

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—
"KALANILAYAM"
11. VELLALA STREET.
Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)